SITHY VINAYAGA...
ARLALAI WEST
CHUNNAKAM

# வணிகமஞ்சரி

ஏப்ரல் 1988 APRIL 1988

வணிகப் புதினங்களையும் கருத்துக்களையும் தாங்கி வெளிவரும் திங்கள் இதழ்

**வணிக அறிவியல் நிறுவன வெளியீடு**

- வணிகச் செய்திகள் ★
- முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ★
- நியாய வியாபார ஆணைக்குழு ★
- கம்பனிகள் சட்டம் ★
- மாணவர் மஞ்சரி ★

# VANIHA MANCHARY

MONTHLY DIGEST OF BUSINESS NEWS & VIEWS

Published by Business Studies Institute

ரூபா 10/-

21/5
SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

வணிக மஞ்சரி

மலர் 2 ஏப்ரல் 88 இதழ் 1

வணிகச் செய்திகளையும்
கருத்துக்களையும் தாங்கிவரும்
திங்கள் இதழ்.

வெளியீடு :

வணிக அறிவியல் நிறுவனம்,
'மஹாலக்ஷ்மி',
அம்மன் கோவில் மேற்கு ஒழுங்கை,
சுதுமலை,
மானிப்பாய்.

ஆட்சி உறுப்பினர் :

- இ. நி. வரேந்திரன்
  பட்டயக் கணக்கறிஞர்
- வே. அரியரத்தினம்
  பட்டயக் கணக்கறிஞர்
- சி. இராஜலிங்கம்
  சந்தைப்படுத்தல் ஆலோசகர்
- வை. ச. செந்தில்நாதன்
  சட்டத்தரணி
- சி. நா. ராதாகிருஷ்ணன்
  பிரதேச முகாமையாளர்
  லங்கா மில்க் பூட்ஸ் லிமிட்
- மு. ஜெகதீசன்
  கைத்தொழிலதிபர்
- ந. பேரின்பநாதன்
  பல்கலைக்கழக விரிவுரையாளர்
- மா. சின்னத்தம்பி
  வலய ஆசிரிய ஆலோசகர்
- சி. யோகேஸ்வரன்
  ஆசிரியர்
- க. நந்தகுமார்
  முகாமைத்துவ கணக்கறிஞர்
- ஜெ. இராஜசிங்கம்
  சந்தைப்படுத்தல் முகவர்

இதழாசிரியர் :

கு. கல்வனே சேயோன்

விலை :

தனிப்பிரதி : ரூபா 10-00
ஆண்டுச் சந்தா : ரூபா 125-00
[தபாற் செலவு உட்பட]

அச்சுப்பதிவு :

மஹாத்மா அச்சகம்,
ஏழாலை.

## சிந்தனை

வணிக மஞ்சரியை ஆரம்பித்தபோது மாதம் தவறாது சஞ்சிகையை வெளியிடச் சங்கற்பம் பூண்டோம். ஆனால் அசாதாரண சூழ்நிலைகள் எமது திட்டங்களைச் சிதறடித்தன. 1987 அக்டோபர் இதழ் வெளியிடும் தருணத்தில் மீண்டெழுந்த வன்முறைக்கு "வணிக மஞ்சரி" முதற் பலியானது. எமது இரண்டாவது வெளியீடாக மலர இருந்த "தேசிய வருமானம்" அடுத்துப் பலியானது. அவை வற்றுக்கும் மேலாக "வணிக மஞ்சரி" ஆசிரியர் ஷெல் தாக்குதலுக்கு ஆளாகி கால் முறிந்த நிலையில் இன்றும் நோய்ப் படுக்கையில் உள்ளார்.

எனினும் நாடளாவிய எமது வாசகர் குழாத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இம்மாதமுதல் வணிக மஞ்சரியை மீண்டும் வெளியிட முன்வந்துள்ளோம். ஆனால் எமது எத்தனத்தில் நாம் எதிர்கொண்ட இடரூறுகள் அளவில. பொருத்தமான அச்சகம் இன்மை, அச்சிடற் பொருட்களின் விலையேற்றம், ஆக்கச் செலவின் ஒரு பகுதியையேனும் ஈடுகட்டக்கூடிய விளம்பரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை என்பவை இவற்றுட் சில.

இந்நிலையில் சஞ்சிகையின் விலையை அதிகரிக்கவேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. எனினும் அதிகரிப்பை ஓரளவுக்கேனும் நியாயப்படுத்தும் விதத்தில் பக்கங்களை அதிகரித்துள்ளோம். உயர் ரக அச்சிடற் பொருட்களையும் பயன்படுத்தியுள்ளோம். இனி, வணிக மஞ்சரியை உங்களால் நீண்டகாலம் பேணிக் காக்கக்கூடியதாக இருக்கும்.

சென்ற ஆண்டில் வணிகவியல் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகளுள் நியாய வியாபார ஆணைக்குழு அமைக்கப்பட்டமை முக்கியமானது. அது தொடர்பான சிறப்புக் கட்டுரை இவ்விதழில் இடம் பெறுகின்றது. முதல் தசாப்த நிறைவைக் கொண்டாடிய பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு பற்றிய கருத்தோவியம் ஒன்றும் வெளிவருகின்றது. வணிகவியலாளரின் 'விவிலிய'மான கம்பனிச் சட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தொடராக வெளியிடப்பட உள்ளன. அதில் ஒருபகுதி இந்த இதழில் வெளியாகின்றது.

வர்த்தக கப்பல்துறை அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஏனைய அமைப்புகள் பற்றிய அறிவு பரீட்சைக் கண்ணோட்டத்தில் வணிகவியல் மாணவருக்கு மிகவும் அவசியமானது. இவைபற்றிய கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும். படித்துப் பயனடையுங்கள்.

தாய்மொழியில் வணிக அறிவியலைப் பரப்பவேண்டும் என்ற எமது இலட்சியத்தை எய்துவதில் உங்கள் நீடித்த ஆதரவை நாடி நிற்கின்றோம்.

# வணிகச் செய்திகள்

தொலைத் தொடர்பும் தனியார் கையில்

தொலைத்தொடர்பு திணைக்களம் விரைவில் தனியார் மயப்படுத்தப்படவுள்ளது. வரையறுத்த பொறுப்புக்கள் கொண்ட ஒரு கம்பனியாக இத்திணைக்களம் மாற்றப்படும். ஜப்பானிய நிறுவனம் ஒன்று 49% பங்குகளையும் இலங்கை அரசாங்கம் 51% பங்குகளையும் இக்கம்பனியில் கொண்டிருக்கும். தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் அந்நிய நிபுணர்களின் ஆலோசனை பெறப்பட்டபோதும் கம்பனியின் முழு நிர்வாகமும் இலங்கையர் கையிலேயே இருக்குமெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய கம்பனி தனது வருமானத்தைத் திறைச்சேரியூடாக வழிப்படுத்த வேண்டிய தேவை இருக்கமாட்டாது. இத்திணைக்களம் தனியார் மயமாக்கப்படவுள்ளதைத் தொடர்ந்து தொலைத் தொடர்புத் துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக நம்பப்படுகின்றது. தனியார் மயமாக்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் வாதங்களில் பிரதானமானது ஊழியர் ஆட்குறைப்பாகும். எனினும் தொலைத்தொடர்புத் துறை தனியார் மயமாக்கப்படும்போது தற்போது சேவையிலுள்ள அனைத்து ஊழியர்களும் புதிய நிறுவனத்தால் பணிக்கு அமர்த்தப்படுவர் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய உதவிகள்

இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளான தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களின் உலகச் சந்தை விலைகளில் சென்ற ஆண்டு காணப்பட்ட வீழ்ச்சி காரணமாக எமது ஏற்றுமதி வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய சென்மதி நிலுவைச் சமமின்மையைச் சமாளிப்பதற்கு உதவு முகமாக, சர்வதேச நாணய நிதியம் ஈடுசெய் நிதியீட்டத் திட்டத்தின் (Compensatory Financing) வாயிலாக நிதி உதவி வழங்கவுள்ளது. வளர்முக நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் சென்மதி நிலுவைச் சமமின்மையும் பாதீட்டுப் பற்றாக்குறைகளும் முக்கியமானவை. பொருளாதாரத்தில் நிலவும் அமைப்பு ரீதியான குறைபாடுகளின் காரணமாக இப்பிரச்சினைகள் தோற்றம் காண்கின்றன. இத்தகைய அமைப்பு ரீதியான சமமின்மைகளைப் (Structural Imbalances) போக்குவதற்கும் சர்வதேச நாணய நிதியம் வளர்முக நாடுகட்கு நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. அடுத்த மூன்று ஆண்டுகட்கு $194 மி. பெறுமானமுள்ள இத்தகைய உதவிகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன. இவற்றுள் $61மி. உடனடியாகப் பயன்படுத்தப்படலாம்.

கைவினைஞருக்கும் ஓய்வூதியம்

விவசாயிகட்கு ஓய்வூதிய – சமூகப் பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப் பட்டுள்ளதைத் தொடர்ந்து கைவினைஞரும் இத்தகைய ஒரு திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட வேண்டுமென கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த ஆலோசனையை மந்திரிசபை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

எக்ஸ்போ – 88

எக்ஸ்போ - 88 என்ற உலகக் கண்காட்சி இவ்வாண்டு அவுஸ்திரேலியாவிலுள்ள குயூன்ஸ்லாந்து நகரில் நடைபெறவுள்ளது. ஏப்பிரல் 30 முதல் செப்ரம்பர் 30 வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் 47 இலங்கை நிறுவனங்கள் காட்சிச்சாலைகளை அமைக்கவுள்ளன. பதனிடப்பட்ட உணவுகள், தேயிலை, தும்புப் பொருட்கள், இறப்பரும் தும்பும் சேர்த்துத் தயாரிக்கப்படும் பொருட்கள், இறப்பர் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், மலர்கள், மென்மையான விளையாட்டுப் பொருட்கள், தளபாடங்கள், மரப்பொருட்கள் போன்ற இலங்கை உற்பத்திப் பொருட்கள் இக்காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்படும். இக்கண்காட்சியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு நாளை அந்நாட்டின் தேசிய தினமாக ஒதுக்கியுள்ளனர். இந்த வகையில் யூலை 19 இலங்கையின் தேசிய தினமாக அமையும். இக்கண்காட்சியை 13 மில்லியன் மக்கள் கண்டுகளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாணிக்கக் கற்களைப் பட்டை தீட்டுதல், பட்டிக் சித்திரம் பதித்தல் போன்ற இலங்கைக்குச் சிறப்பான தொழில்கட்குக் கண்காட்சியில் செயல்முறை விளக்கமும் வழங்கப்படவுள்ளது. எக்ஸ்போ-88 வெறுமனே ஒரு வர்த்தகக் கண்காட்சி மட்டுமன்று. எமது நாடு பற்றிப் பல்வேறு அம்சங்களைப் பிற நாடுகளுக்கு எடுத்துக் காட்டும் நிகழ்வாக இது அமைதல் வேண்டும். இந்த வகையில் இலங்கையின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நடன நிகழ்ச்சிகளும் வாசனைத்திரவியங்களின் மகிமையை எடுத்துக்காட்டும் உணவுஉற்சவமும் அக்கண்காட்சிக் காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது. மொத்தத்தில் இலங்கை பற்றிய கவர்ச்சிமிக்க சித்திரம் ஒன்றினை அவுஸ்திரேலியர்கட்குக் காட்டுவதன் மூலம் அவுஸ்திரேலிய உல்லாசப்பயணிகளைப் பெருமளவில் கவர்வதற்கு இச்சந்தர்ப்பம் பூரணமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

### ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது

விருதுகள் வழங்கிக் கௌரவிப்பதன் மூலம் ஏற்றுமதியாளர்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும் என்ற எண்ணக்கரு 1975லேயே தோற்றம் பெற்றுவிட்டதெனலாம். தற்போது ஏற்றுமதி அபிவிருத்திச்சபையே விருதுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுத்து வருகின்றது. 1979ல் இச்சபை அமைக்கப்பட முன்னர் ஏற்றுமதி மேம்பாட்டுச் செயலகம் என்ற அரச திணைக்களம் இச்சபையின் பணிகளை ஆற்றிவந்தது. இலங்கை வர்த்தகச் சம்மேளனமும் இச்செயலகமும் இணைந்து ஏற்றுமதிகட்கு விருது வழங்கும் திட்டம் ஒன்றினைத் தயாரித்தன. இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை இலங்கை வர்த்தக சம்மேளனமே ஆரம்பத்தில் ஏற்றிருந்தது. 1979ல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இப்பணியை இச்சபை ஆற்றிவருகின்றது. ஏற்றுமதியுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புகொண்டு சாதனைபுரிந்தவர்களுள் முதன்மையானவர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர். கணிசமான அளவு சாதனை புரிந்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

விருது பெறுவோர் ஒருலட்சம் பணப் பரிசுடன் சான்றிதழும் பெறுவதுடன் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு இவ்வாறு விருது பெற்றமையை அவர்கள் தமது விளம்பரங்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வகையில் 1987க்கான ஜனாதிபதி விருதுகளைப் பின்வருவோர் பெற்றுள்ளனர்:-

| | நிறுவனம் | பண்டம் |
|---|---|---|
| 1. | இயூரோ ஸ்கான் எக்ஸ்போட்ஸ் (தனி)லிட். | பரிசில் வழங்குவதற்கான தேயிலைப் பொதிகள் |
| 2. | ஸ்டாகன் ஏற்றுமதி லிட். | பைகளில் அடைக்கப்பட்ட பொதியிடப்பட்ட, கறுப்பு பச்சை, தேயிலையும், வாசனைத் திரவியங்களும். |
| 3. | களனிப்பள்ளத்தாக்கு கானரீஸ் லிட். | தகரத்தில் அடைக்கப்பட்ட / குளிரூட்டப்பட்ட பழங்களும் பழச் சாறுகளும். |
| 4. | ரன்லியா ஆடைகள் கைத்தொழில் லிட். | பருத்தியாலான கையுறைகள் |
| 5. | கொயர்டெக்ஸ் லிட். | தும்புப் பாய்கள் |
| 6. | ஹியூஜே சர்வதேச (பூங்கனி) லிட். | கார்னேஷன் மற்றும் ஏனைய மலர்கள் |

பின்வரும் நிறுவனங்கள் சான்றிதழ்களைப் பெற்றுள்ளன:-

| | | |
|---|---|---|
| 1. | எக்ஸ்போலங்கா லிட். | பசுமையான பழங்களும் மரக்கறிகளும் |
| 2. | கிறியேஷன்ஸ் (தனி) லிட். | நாகரிக ஆடைகள் |
| 3. | ஹே கிருப் லிட். | செயலூக்கப்பட்ட கரி (Activated Carbon) |
| 4. | மக்பெக் ஏற்றுமதி லிட். | கைவினைப் பொருட்கள் |
| 5. | சிம்பிளெக்ஸ் கைத்தறி நிறுவனம் | கைவினைப் பொருட்கள் |
| 6. | புளூ டைமன்ட்ஸ் லிட். | பட்டை தீட்டப்பட்ட வைரம் |

### நலிந்த நிதி நிறுவனங்கட்கு மறுவாழ்வு

இலங்கையில் நூற்றுக்கு மேற்பட்ட நிதிநிறுவனங்கள் காணப்படுகின்றன. 1979ஆம் ஆண்டின் நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி ஒரு லட்சத்துக்கு மேல் மூலதனம் கொண்டவையும் ஐந்து லட்சத்துக்கு மேல் வைப்புக்களைத் திரட்டியவையுமான நிதி நிறுவனங்கள் மத்தியவங்கியுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். இத்தகைய 70 கம்பனிகள் தம்மை மத்தியவங்கியுடன் பதிவுசெய்துள்ளன. இவற்றுள் 54 கம்பனிகள் மட்டுமே கணக்காயப்பட்ட கணக்கறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. நிதிக்கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் மத்திய வங்கிக்குப் பரந்த அதிகாரங்களை வழங்கியிருந்த போதிலும் நிதி நிறுவனங்களில் வைப்புக்களைச் செய்துள்ள பொதுமக்களின் நலன்களுக்குப் பாதகங்கள் ஏற்படாத முறையில் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என மத்தியவங்கி தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டியுள்ளது. வங்கி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிதிக்கம்பனியைக் குலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அவ்வாறு குலைக்கப்படும் பட்சத்தில் அக்கம்பனியில் வைப்புக்களை இட்ட பொதுமக்கள் தமது முதலீட்டில் குறித்த ஒரு பகுதியை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். இந்த வகையில் அண்மையில் நிதி நெருக்கடிகளை எதிர்கொண்ட இரு பெரும் நிதிநிறுவனங்களைக் குலைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அவற்றுக்கு மறுவாழ்வு வழங்குவதில் மத்தியவங்கி அக்கறை காட்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ரெமி - புதிய விவசாயக் கைத்தொழில் பயிரினம்

மகாவலிப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளோரின் 2ம் தலைமுறையினர் எதிர்கொள்ளக்கூடிய பொருளாதாரப் பிரச்சனைகட்குத் தற்போதே தீர்வு காண்பதற்காக மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அதற்கெனத் தனியான பிரிவு ஒன்றினைத் தோற்றுவித்துள்ளது. மகாவலி பொருளாதார முகவராண்மை நிலையம் (Mahaweli Economic Agency) என அழைக்கப்படும். இப்பிரிவு இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. விவசாயக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் இப்பிரச்சினையைக் கையாள இந்த நிலையம் எத்தனிக்கின்றது. ரெமி (Remie) என அழைக்கப்படும் புதிய வகைப் பயிர் ஒன்றினை வளர்ப்பதற்குத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 6 மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய இப்பயிரின் தண்டுகளிலிருந்து பெறக்கூடிய நாரினைக்கொண்டு புடவை, மீன்பிடி வலைகள், கூடாரங்கள் அமைக்கும் துணிகள் (Tarpaulin), கம்பளங்கள் என்பனவற்றைத் தயாரிக்க முடியும். வர்த்தக அளவில் இப்பயிர்ச்செய்கை விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள இவ்வேளையில் இப்பயிரிலிருந்து பெறக்கூடிய நாரிலிருந்து கூரைக்குத் தேவையான பொருட்கள் (Roofing Materials), வாகனங்கட்குத் தேவையான தடைப்பொறிகள் (Brake Lines), காற்றுடிப் பட்டிகள் (Fan Belts) என்பவற்றையும் தயாரிக்க முடியுமெனத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### மாலைதீவு - இலங்கை: கூட்டு ஒத்துழைப்பு

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையேயான கூட்டு ஒத்துழைப்புக்கான துறையாகச் சுற்றுலாத் துறை இனங் காணப்பட்டுள்ளது. இரு நாடுகட்கு இடையேயான பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றமை தெரிந்ததே. இலங்கையின் சார்பில் இக்கூட்டத்தில் வர்த்தகக்கப்பல் துறை அமைச்சு, இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் என்பவற்றின் உயரதிகாரிகளும் தனியார் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். நிதி அமைச்சின் செயலாளர் இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கினர்.

இலங்கையில் உள்ள குளிர் அறை வசதிகளைப் (Cold Room) பயன்படுத்தி மீன்களைத் தகரத்தில் அடைத்தல், புடவை ஆலைகளை அமைப்பதற்கும் நிர்மாண வேலைகளை மேற்கொண்ட இலங்கை கம்பனிகளை நிறுவுதல் என்பவற்றிலும் கூட்டு முயற்சிக்கான வாய்ப்புக்கள்பற்றி ஆராயப்பட்டுள்ளன. இருநாடுகட்கிடையேயும் பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நோக்கமே இக்குழுக் கூட்டத்தின் தொனியாக அமைந்திருந்தது. அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மருந்து வகைகளை மாலைதீவுக்கு விற்பனவு செய்யவுள்ளது.

### கண்காட்சி

மாணிக்கக் கற்கள், ஆபரணங்கள் என்பவற்றின் கண்காட்சி ஒன்று மார்ச் 13, 14ம் திகதிகளில் கொழும்பு ஹோட்டல் லங்கா ஒபரேயில் நடைபெற்றது. இலங்கை மாணிக்கக் கல் இயல் சங்கம், மாணிக்கக் கல் ஏற்றுமதியாளர் சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் நடாத்தப்பட்ட இக்கண்காட்சியில் இலங்கையின் முன்னணி ஆபரணத் தயாரிப்பாளர்கள், மாணிக்கக் கல் வியாபாரிகள், இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம், தேசிய வடிவமைப்புச்சபை என்பவற்றின் உற்பத்திப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் ஆபரண வடிவமைப்புக்கான போட்டியொன்றும் இக்கண்காட்சிக் காலத்தில் நடாத்தப்பட்டது. வெற்றிபெறும் ஐவர் லண்டனிலுள்ள பிரபல வடிவமைப்பு நிறுவனத்தின் புலமைப்பரிசில் பெறும் அருகதையைப் பெற்றனர். இதுவரை காலமும் எவரது கவனத்தையும் ஈர்க்காது எமது நாட்டை விட்டுப் புறத்தே கொண்டு செல்லப்பட்ட எமது மாணிக்கக்கல் வளத்தின்மீது உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக இது நடாத்தப்படுகின்றது.

### வீட்டுடைமை உச்சவரம்புச் சட்டத்துக்குத் திருத்தம்

1973ம் ஆண்டின் 1ம் இலக்க வீட்டுடைமை உச்சவரம்புச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின்படி 1987 ஜனவரி 1ம் திகதி முதல் வீட்டுடைமை மீதான உச்சவரம்பு தொடர்பான கட்டுப்பாடுகள் அகற்றப்படுகின்றன. எனினும் பழைய சட்டத்தின் வாயிலாகக் குறித்த தினத்தின்முன் வீடுகளின் உடமையாளராக வந்தோரின் நலன்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத விதத்தில் புதிய திருத்தம் அமைந்துள்ளது.

### வண்ண மீன் வளர்ப்பு

மகாவலிப் பிரதேசத்தில் வண்ண மீன் வளர்ப்பு நல்ல வருவாய் தரும் துறையாக வளர்ந்து வருகின்றது. வீடுகளில் அமைக்கக்கூடிய தடாகங்களில் இத்தகைய மீன்களை வளர்த்து, குறுகிய காலத்தில் உயர் வருவாய் ஈட்டக்கூடியதாக உள்ளது. ரூ. 1000/- முதலீடுசெய்யும் ஒருவர் 6 மாத இறுதியில் ரூ. 25,000/- வருமானமாகப் பெற முடிகின்றது. வண்ண மீன்களை ஏற்றுமதி செய்யும் கொழும்பு தனியார் துறை நிறு

வனம் ஒன்று இத்தகைய மீன்வளர்ப்பில் இளைஞர் கட்குப் பயிற்சி அளித்து அவர்களால் வளர்க்கப்பட்ட மீன்களைக் கொள்வனவு செய்கின்றது. ஐக்கிய இராச்சியம், அ. ஐ. நாடுகள், யப்பான், மே. ஜேர்மனி போன்ற நாடுகட்கே இலங்கையிலிருந்து வண்ண மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### தீர்வையற்ற கடைகளில் அதிகரித்த வர்த்தகம்

தீர்வையற்ற கடைகளில் கொள்வனவு செய்யும் பொருட்களை 3 மைலுக்கு அப்பாலுள்ள துறைமுகங்களிலிருந்தே பெற்றுக்கொள்ளல் வேண்டும் என இரு வருடங்களின் முன்னர் செய்யப்பட்ட விதியின் காரணமாக இக்கடைகளில் வர்த்தகம் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் பொருட்களைக் கொள்வனவு செய்யும் இடத்திலிருந்தே அவற்றைச் சேகரிக்கக்கூடிய விதத்தில் தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாகவும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான கப்பல்சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதனாலும் தீர்வையற்ற கடைகளில் பெருமளவு வர்த்தகம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### நிதிக் கம்பனிகளில் மக்கள் சேமிப்புகள்

இலங்கைவாசிகள் ரூ. 3 பி. ரூ. 5 பி. வரையிலான வைப்புகளை நிதிக்கம்பனிகளில் இட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 80% மானவை 5 முன்னணி நிதிநிறுவனங்களில் இடப்பட்ட வைப்புகளாகும்.

### மத்தியவங்கி எச்சரிக்கை

நிதிநிறுவனங்கள் வைப்புகட்கு வழங்கக்கூடிய வட்டி விகிதத்தின் உயரளவை மத்தியவங்கி தற்போது விதித்துள்ளது. இதனை மீறும் விதத்தில் போனஸ் என்ற பெயரிலும் வேறு வகையிலும் இந் நிறுவனங்கள் உயர்வட்டியை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளரின் வைப்புகளைக் கவர்வதற்கும் போட்டியிட்டு வருகின்றன. இது மத்தியவங்கியின் அறிவுறுத்தல்களை மீறும் ஒரு செயலாகும் என மத்தியவங்கி எச்சரித்துள்ளது.

### மீன் இறக்குமதி

உடன் மீனுக்கான இறக்குமதி வரி 6 மாதங்கட்கு நீக்கப்பட்டுள்ளதென நிதிமந்திரி அறிவித்துள்ளார். இலங்கையர் எமது வருமானத்தில் 9%ஐ உணவுக்காக மீன் கொள்வனவு செய்வதில் செலவிடுகின்றனர் என்று மத்தியவங்கியின் அண்மைக்கால ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவருகின்றது. இந்த வகையில் மீனின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு வாழ்க்கைச் செலவில் அதிகரிப்பை ஏற்படுத்துவது இயற்கையே. மீனுக்குத் தற்போது நிலவும்தட்டுப்பாட்டுக்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஐஸ் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிக் குறைவுகளும் இக்காரணங்களில் சிலவாகும். இலங்கையின் தென்பகுதியில் கண்டமேடைகள் காணப்படாமையும், மீன்பிடித்தலில் புராதன முறைகள் கைக்கொள்ளப்படுதலும் மீன் உற்பத்திக் குறைவுக்குக் காரணமாக அமைகின்றன. மீன்பிடித்தல் இயந்திரமயமாக்கப்பட்டபோது மீன் உற்பத்தி அதிகரித்ததெனினும் எரிபொருள் விலை உயர்வால் அதிகளவு இலாபம் பெறமுடியாத நிலையே காணப்பட்டது. வட - கிழக்குப் பகுதிகளில் காணப்படும் ஸ்திரமற்ற அரசியல் நிலையும் மீன் உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. மீன்பிடித் தொழிலைப் பொறுத்த வரை அந்நிய உதவியின் அளவு காலத்துக்குக் காலம் குறைந்து செல்வதைக் காணமுடிகின்றது. 1983ல் ரூ. 55 மி. ஆக இருந்த உதவிகள் 1988ல் ரூ. 17 மி. ஆக வீழ்ச்சி அடைந்துள்ளன.

மீன்பிடி அமைச்சு மீனவருக்கான காப்புறுதித் திட்டம், ஓய்வூதியத் திட்டம் போன்ற சமூகநலத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ள போதிலும் மீன்பிடியை ஒரு கைத்தொழிலாக வளர்த்தெடுப்பதில் தோல்வியே கண்டுள்ளதென்பது ஒரு சாரார் வாதமாகும்.

### தேயிலை ஏல விற்பனையில் ரஷ்யா

நீண்டகால இடைவெளியின் பின்னர் பெப்ரவரி மாதத்தில் இலங்கை தேயிலை ஏலவிற்பனையின்போது ரஷ்யாவும் பங்குபற்றலாயிற்று. ஐ. அ. நாடுகள் தென்னாபிரிக்கா, ஐக்கியராச்சியம், பாகிஸ்தான், கனடா, யப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுடன் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த வேறுபல நாடுகளும் தற்போது கொழும்பு ஏலவிற்பனையில் கலந்து கொள்கின்றன. இதனால் தேயிலையின் விலைமட்டத்தில் கணிசமான உயர்ச்சி காணப்பட இடமுண்டு என நம்பலாமா?

### கம்பியூட்டர் தயாரிப்பில் இந்தியா தீவிரம்

கம்பியூட்டர் தயாரிப்பில் இந்தியா அதிக அக்கறை காட்டி வருகின்றது. 5ம் தலைமுறை கம்பியூட்டர்களை அடுத்த 5 ஆண்டுகட்குள் தன்னால் தயாரிக்க முடியுமென இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது. 1985ல் $ 1.19 மி. ஆக இருந்த கம்பியூட்டர் விற்பனை 1987ல் $ 3.07 மி. ஆக அதிகரித்தது. இது 1991ல் $ 7.68 மி. ஆக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### மலரியல் கண்காட்சி

சர்வதேச பூந்தோட்ட – பச்சைய கண்காட்சி ஒன்று 1990 ஏப்ரல் 1 – முதல் செப்.30 வரை நடாத்தப்படவுள்ளது. 50 நாடுகள் இக்கண்காட்சியில் பங்குகொள்ள உள்ளன. யப்பானில் உள்ள ஒசாகா நகரில் 140 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்ட பூங்காவில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி அமைப்புக்கென யப்பானிய அரசாங்கம் $ 600 மி. செலவிடவுள்ளது. இயற்கையின் பெறுமதியை மக்களுக்கு உணர்த்துவதற்கென உலகெங்கணுமுள்ள மலர்கள், தாவரங்களைச் சேர்த்துக் காட்சிக்கு வைப்பதே இக்கண்காட்சியின் நோக்கமாகும். சர்வதேச நல்லெண்ணத்தையும் உலக சமாதானத்தையும் வளர்க்க இக்கண்காட்சி உதவும் என இதன் அமைப்பாளர் திடமாக நம்புகின்றனர். இக்கண்காட்சியில் இலங்கையும் கலந்து கொள்ளவுள்ளது.

### இ. போ. ச. சேமலாப நிதி

இலங்கை போக்குவரத்துச் சபையில் 49,000 ஊழியர் காணப்படுகின்றனர். இவர்களுக்கெனத் தனியானதொரு ஊழியர் சேமலாப நிதியைச் சபை நடாத்தி வருகின்றது. ஊழியர்களது சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட விகிதம் கழிக்கப்படுவதுடன் சபையும் தனது பங்களிப்பை இந்நிதியில் இட்டுவருகின்றது. இந்நிதியில் தற்போது ரூ. 3பி. மீதி காணப்படுகின்றது. இதில் ரூ. 1 பி. மத்திய வங்கியிலும் ரூ.500 மி. தேசிய சேமிப்பு வங்கியிலும் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியிலிருந்து ரூ. 1 பி. பெறுமானமுள்ள கடன்களைத் தனது ஊழியர்கட்கு இச்சபை வழங்கியுள்ளது.

### தனியார்துறை ஊழியருக்கு வரப்பிரசாதம்

தொழில் திணைக்களம் நவீன திட்டம் ஒன்றினைத் தயாரித்துள்ளது. இதனல் தனியார்துறை, பெருந்தோட்டத்துறை, கூட்டுத்தாபனத்துறை என்பவற்றில் பணியாற்றும் 2.5 மி. ஊழியர் பயன்பெற உள்ளனர். இதுவரை இந்த ஊழியர்கட்கு ஊழியர் சேமலாப நிதி நலன்கள் மட்டுமே கிட்டிவந்தன. புதிய திட்டத்தின்படி இவ் ஊழியர்கள் ஓய்வுபெறும்போது ஒய்வூதியம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இதற்கான சட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இச்சட்டம் அமுலுக்கு வரும் திகதியின் பின்னர். தற்போது ஊ. சே. இலாபநிதிக்குச் செலுத்தப்படும் பணம் ஒய்வூதியநிதியம் ஒன்றில் வரவு வைக்கப்படும். குறித்த ஊழியர் 55 வயதின் பின்னர் ஒய்வு பெறும்போது இதுவரை ஊழியர் சேமலாப நிதியில் அவர் கணக்கில் காணப்பட்ட தொகையை ஒரே தடவைச் செலுத்துமதியாகவும் இனிமேல் செலுத்தப்படும் தொகையை அடிப்படையாகக் கொண்ட ஒய்வூதியத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். தமது ஊ. சே. இலாபநிதி கணக்கில் காணப்படும் தொகையை ஒய்வூதியக் கணக்குக்கு மாற்றுவதற்கு இசையும் உறுப்பினர் மாதாந்த ஒய்வூதியமாக அதிகரித்த பணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இவரது மரணத்தின் பின்பும், இவரது மனைவி, பிள்ளைகள் என்போர் ஒய்வூதியத்தைத் தொடர்ந்து பெறுவர். மணமுடிக்காத உறுப்பினரைப் பொறுத்தவரை அவர்களது பெற்றோருக்கு ஒய்வூதியம் வழங்கப்படும். சர்வதேச தொழிற்சம்மேளனம், பல்வேறு தொழிற்சங்கங்கள் என்பவை இத்தகைய ஒய்வூதியத் திட்டம் ஒன்று வகுக்கப்படல் வேண்டும் என வற்புறுத்தி வந்தமையைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் ஒய்வூதியத் திட்டம், மீனவர் ஒய்வூதியத் திட்டம், கைவினைஞர்களுக்கான ஒய்வூதியத் திட்டம் என்பவை அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. முறைசாராத் துறையினருக்கு ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாக இவை வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் உறுப்புரிமை பெறுவது, குறித்த ஊழியரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். ஆனல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள துறையில் ஊ. சே. இலாப நிதியில் உறுப்புரிமை சட்டமுறையான கடப்பாடாகும். இப்போது அத்திட்டம் ஒய்வூதியத் திட்டமாக நீடிக்கப்பட்டிருப்பதனல் அரச சேவை சாராத ஒழுங்குபடுத்தப்பட்ட துறை ஊழியருக்கும் அரச சேவையிலுள்ளோர் பெற்றுக்கொள்வதற்கு ஈடான ஒய்வூதியம் கிடைக்க வழி கிடைத்துள்ளது. பல்வேறு முயற்சிகள் தனியார் மயமாக்கப்படும் இந்நேரத்தில் புதிய ஒய்வூதியத் திட்டம் பெருமளவு வரவேற்பைப் பெறும் என நம்பப்படுகின்றது.

### தரக் கட்டுப்பாடு

சுகாதாரம், பாதுகாப்பு (Safty) என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புகொண்ட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களும் தரமானவையாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதில் இலங்கை கட்டளைகள் பணியகம் குறிப்பாக அக்கறைகொண்டுள்ளது. இந்த வகையில் தமது தரச்சான்றிதழைப் பெற்றபின்பே இத்தகைய பொருட்களின் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்படல் வேண்டுமென இப்பணியகம் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

இப்பணியகத்தின் தரச்சான்றிதழைப் பெற்ற உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பொருட்களில் S. L. S. என்ற சின்னத்தைப் பொறிக்கும் அனுமதியைப் பெற்றுக்கொள்வர். தீவிரமான தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகளின் பின்பே இத்தகைய அனுமதியைப் பணியகம் வழங்கும்.

தற்போது 35 வகையான பொருட்கள் பணியகத்தால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பொருட்களை ஆக்கும் உற்பத்தியாளருக்கு S. L. S. சின்னம் பயன்படுத்தும் அனுமதியைப் பணியகம் வழங்கியுள்ளது.

குறித்த பொருளுக்கு S. L. S. சின்னத்தைப் பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்ட பின்னரும் காலத்துக்குக் காலம் உற்பத்திப் பொருட்கள் பணியகத்தின் தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகட்கு உட்படுத்தப்படுகின்றன. அரச திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும் உற்பத்திசெய்யும் பொருட்களுக்கு இப்பணியகத்தின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### நுகர்வோர் கல்வி வட்டம்

நுகர்வோர் பாதுகாப்பினைத் தனது நோக்கமாகக் கொண்ட இப்பணியகம் நுகர்வோர் கல்வி வட்டங்களைப் (Consumer Education Circles) பதிவுசெய்து வருகின்றது. நுகர்வோர் பாதுகாப்பு உணர்வினை ஆரம்பமட்டத்திலேயே ஊக்குவிப்பதற்காக இத்தகைய கல்விவட்டங்கள் பாடசாலை மாணவரிடையே அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய கல்வி வட்டங்களிடையே நுகர்வோர் கையேட்டுப் போட்டி (Consumer Hand Book Competition) ஒன்றையும் இப்பணியகம் அண்மையில் நடாத்தியது.

### சூழல் மாசடையும் ஆபத்து

கொழும்பு மாநகரின் கழிவுகள் கடலுக்குள் அப்புறப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு அப்புறப்படுத்தப்படும் கழிவுகள் நீரோட்டங்களால் மீண்டும் கரைக்கு எடுத்துவரப்பட்டு சூழலை மாசுபடுத்துகின்றனவா என்பது பற்றி மத்திய சூழல் பாதுகாப்பு அதிகார சபையும் அணுவலு அதிகார சபையும் கூட்டாக ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளன. கழிவுகளைச் சுத்திகரிக்காமல் கடலுக்குள் அப்புறப் படுத்துவது சூழல் பாதுகாப்புக்குக் குந்தகமானது என்பது சூழல் வல்லுநர்களின் கருத்தாகும்.

### கடன்கள் – பதிவழிப்பு

வறிய மூன்றும் உலக நாடுகளுக்கு வழங்கிய கடன்களுள் $1.6 பி. பெறுமானமுள்ளவற்றைத் தான் அறவிடப்போவதில்லை என மே. ஜேர்மனி அறிவித்துள்ளது. மேலும் இத்தகைய நாடுகட்கு இனி உதவி வழங்கும்போது கடன்களாக வழங்காமல் கொடைகளாக வழங்குவதற்கும் மேற்கு ஜேர்மனி உத்தேசித்துள்ளது.

### சி. ந. கை. கடன் திட்டம் III

தேசிய அபிவிருத்தி வங்கி சிறிய நடுத்தர கைத்தொழில் கடன் திட்டத்தின் வாயிலாக 42,000 வேலைவாய்ப்புக்களைத் தான் உருவாக்கியுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது. இவ்வேலை வாய்ப்புக்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இத்துணைப் பெருமளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு மேந்தலைச்செலவுகள் எதும் ஏற்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் அறவீட்டு விகிதம் 75% மாக அமைந்திருப்பது உற்சாக மூட்டுவதாக உள்ளதென்றும் இவ்வங்கியின் தலைவர் அண்மையில் கூறியுள்ளார். தேசிய அபிவிருத்தி வங்கி சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டத்தை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நாஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகிய ஐந்து பங்கேற்கும் கடன் நிறுவனங்களினூடாகச் செயல்படுத்தி வருகின்றது.

இக்கடன் திட்டத்தால் 1800 புதிய கைத்தொழிற்கூறுகள் உருவாக்கப்பட்டிருப்பதுடன் 2340 கூறுகளின் உற்பத்தி இயலளவு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்காகவும் இறக்குமதிகளைப் பிரதியீடு செய்யவும் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கென இத்திட்டத்தின்கீழ்க் கடன்கள் வழங்கப்படுகின்றன.

சிறிய நடுத்தரக் கைத்தொழிற் கடன்களுக்கென இரு திட்டங்களைத் தேசிய அபிவிருத்தி வங்கி இது வரை நிறைவு செய்துள்ளது. தற்போது அதனல் செயற்படுத்தப்படுவது மூன்றுவது திட்டமாகும். உலக வங்கி வழங்கும் ரூ. 2,600 மி. கடன் வசதியைக் கொண்டு தற்போதைய கடன் திட்டம் செயற்படுத்தப்படும்.

பங்கேற்கும் கடன் நிறுவனங்கள் வழங்கும் கடன்களுக்கு மீள் நிதிவசதி அளிப்பதன் மூலம் தேசிய அபிவிருத்தி வங்கி மேற்படி கடன்வசதியைப் பயன்படுத்துகின்றது. இத்துடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களின் ஒரு பகுதிக்கு மத்திய வங்கியின் கடன் உத்தரவாதமும் கிடைக்கின்றது. வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் கடன்கள் அறவிடப்பட முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் அக்கடன் வழங்கிய வங்கிக்கு மத்திய வங்கி தான் உத்தரவாதம் செய்த பகுதியை மீளளிப்பதன் மூலம் இந்த உத்தரவாதத் திட்டம் செயற்படுத்தப் படுகின்றது. எனினும் சிறிய முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு உத்தரவாதம் வழங்குவதில் மத்தியவங்கி அதிக அக்கறை காட்டி வருகின்றது. பெரிய முதலீட்டாளர்களைப் பொறுத்தவரை அவர்களால் ஏற்படக்கூடிய இடையூறுகளைக் கடன்வழங்கும் வர்த்தக வங்கிகளே பொறுப்பேற்க வேண்டும்.

# கம்பனிகள் சட்டம்

ஆக்கம்: வே. அரியரத்தினம், A.C.A.
தமிழில்: சி. யோகேஸ்வரன், B.A.

வணிகஇயலுடன் தொடர்பு கொண்டோருக்குக் கம்பனிகள் சட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதன் பல்வேறு அம்சங்கள் பற்றி பட்டயக் கணக்கறிஞர் திரு. வே. அரியரத்தினம் தொடர்ச்சியாக விளக்கவுள்ளார்.

## இயக்குனர்களின் அறிக்கை

### தோற்றுவாய்

சட்டமுறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் ஆண்டுதோறும் சில தகவல்களைப் பிரசுரிப்பது அத்தியாவசியம் ஆகின்றது. இவற்றுள் இயக்குனர்களின் அறிக்கையும் ஒன்றாகும். இத்தகைய அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியவை யாவை என்பது பற்றியதாக இக் கட்டுரை அமைகின்றது.

### அறிமுகம்

ஒரு கம்பனியின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக அதன் பங்குதாரர்களால் தெரிந்து எடுக்கப்படுபவர்களே இயக்குனர்கள் ஆவர். தீர்மானங்கள் மேற்கொள்ளுதல், அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், ஊழியர்களைப் பணிக்கு அமர்த்தல் என்பவை உட்பட, தொழிலின் நாளாந்த வேலைகளைக் கொண்டு நடாத்துதல் இவர்கள் பணியாகும். கம்பனி உயர்ச்சி அடைவதற்கு ஆகவேண்டியவற்றைச் செய்வதும் இவர்கள் பணியே. கம்பனியின் இயக்குனர்கள் என்ற வகையில் இவர்கட்குச் சில கடப்பாடுகள் உள்ளன. கம்பனிகள் சட்டம், இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் என்பவை மட்டுமன்றிக் கணக்கறிஞர் மற்றும் கணக்காய்வாளரின் உயர்தொழில் பாரம்பரியங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட நடைமுறைகளாலும் இக் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 132ஆம் பிரிவு கம்பனியின் பொதுக்கூட்டத்துக்கு ஐந்தொகை சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு வேளையிலும் இயக்குனர்களின் அறிக்கை ஒன்றும் அத்துடன் இணைக்கப்பட வேண்டும் என விதிக்கின்றது. இந்த அறிக்கையில் எந்த எந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதையும், அவை உள்ளடக்கப்படாவிட்டால், அவற்றுக்கான தண்டனைகள் யாவை என்பதையும் சட்டத்தின் இப்பிரிவு விளக்குகின்றது.

இந்த அறிக்கை சில நிறுவனங்களால் (இயக்குனர்களின்) தலைவரின் அறிக்கை (Chairman's Report) எனவும் வழங்கப்படுவது உண்டு. இயக்குனர்களின் அறிக்கை உண்மையான கணக்குகளுக்கு முரண்பட்டதாக இருக்குமிடத்து, கணக்காய்வாளர் இதனைப் பற்றி அறிக்கை செய்யவேண்டும். இது கணக்காய்வாளரின் பாரம்பரியத்தின் விளைவாக எழுந்த ஒரு அம்சமாகும்.

இயக்குனர்களின் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் பின்வருமாறு:

### தொழிலின் நேர்மையான மீட்டாய்வு
### (Fair Review of Business)

குறித்த நிதியாண்டில் கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் தொழில் அபிவிருத்தி பற்றிய நேர்மையான மீட்டாய்வும், ஐந்தொகை திகதியில் கம்பனியின் சொத்துக்கள், விவகாரங்கள் என்பவற்றின் நிலை, குறித்த நிதியாண்டில் கம்பனியினது அல்லது துணை நிறுவனங்களின் தொழிலின் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த கம்பனி வேறொரு கம்பனியின் உறுப்பினர் என்ற வகையிலோ அல்லது வேறு விதத்திலோ குறித்த ஒரு தொழிலில் அக்கறை கொண்டிருந்து அந்த அக்கறை அந்த நிதியாண்டில் வேறுபட்டு இருந்து அதன் வாயிலாகக் கம்பனியின் வளர்ச்சியைப் பாதிக்குமாயின் அவை பற்றிக் கூற வேண்டும். எனினும் கம்பனியினதோ அல்லது துணை நிறுவனங்களினதோ தொழிலுக்கு இத்தகைய தகவல்கள் வெளியிடப்படுவது குந்தகமாக அமையுமெனின் இவற்றை வெளிப்படுத்தாதும் விடலாம்.

### பங்கிலாபமும் ஒதுக்கீடுகளும்

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் கம்பனியானது தான் ஈட்டிய லாபத்தில் ஒரு பகுதியைப் பல்

வேறு ஒதுக்குகளுக்கு மாற்றம் செய்யும். எஞ்சிய தைப் பங்குதாரர்களுக்குப் பங்கிலாபமாகப் பிரித் தளிக்கும். இவ்வாறு ஒதுக்கலுக்கு மாற்றம் செய்ய உத்தேசித்து இருக்கும் தொகையையும், பங்குலாப மாகப் பங்கீடு செய்யச் சிபார்சு செய்யும் தொகை யையும் அறிக்கையில் குறிப்பிடல்வேண்டும்.

எதிர்கால வளர்ச்சிகள்

கம்பனி தொழில் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள்.

நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்களில் ஏற்பட்ட குறிப்பிடத் தக்க மாற்றங்கள் மற்றும் காணி கட்டிடங்கள் என் பனவற்றின் சந்தைப் பெறுமானத்துக்கும், ஏட்டுப் பெறுமானத்துக்கும் பாரிய வேறுபாடு காணப்பட் டால் அவைபற்றிக் குறிப்பிடவேண்டும். சில சமயங் களில் இத்தகைய மாற்றங்கள் கணக்குக் கூற்றுகளின் கீழ்க் குறிப்புகளாகக் கொடுக்கப்படுவதும் உண்டு. அவ்வாறாயின் இக் குறிப்புப் பற்றி இயக்குனர்களின் அறிக்கையில் பிரஸ்தாபிக்கவேண்டும்.

இயக்குனர்களின் பெயர்கள்

கம்பனியின் இயக்குனர்களின் பெயர்களைக் குறிப் பிடவேண்டும். குறித்த நிதியாண்டின் எப்பகுதியா லாவது, எவராவது கம்பனியின் இயக்குனராக இருந் திருந்தால் அவர்களது பெயர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

பங்குகள், தனிச்சங்கள் (Debenture) என்பவற்றில் இயக் குனர்களின் அக்கறை

இயக்குனர்கள், அவர்களது வாழ்க்கைத் துணைவர், பராயமடையாத பிள்ளைகள் முதலியவர்கள் கம்பனி யின் பங்குகள், தனிச்சங்களில் கொண்டுள்ள அக்கறை யின் அளவு வெளிப்படுத்தப்படல் வேண்டும். இயக்கு னர் ஒருவர் கம்பனியில் பங்குகள் வைத்திருக்காவிட் டால் அந்த உண்மையும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

ஒப்பந்தங்களில் இயக்குனர்களின் அக்கறை (Directors' interest in Contracts)

கம்பனியுடனான ஒப்பந்தங்களில் இயக்குனர்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அக் கறைகொண்டு இருக்கிறார்களா? அப்படி இருப்பின் அக்கறையின் தன்மை அத்துடன் கம்பனிச் சட்டத் தின் 203ஆம் பிரிவின்படி சம்பந்தப்பட்ட இயக்கு னர் தனது அக்கறைபற்றி இயக்குனர் சபைக் கூட் டத்தில் வெளிப்படுத்தினாரா? என்ற விபரங்களும் கம்பனியுடனான ஒப்பந்தங்களில் எந்த ஒரு இயக்கு னர்க்கும் அக்கறை இல்லாவிட்டால் அந்த உண்மை யும் வெளிப்படுத்தப்படல்வேண்டும்.

முக்கிய வினைநெறிகள் (Principal activities)

இயக்குனர் சபையின் தலைவரின் மீட்டாய்வில் அல்லது இயக்குனர் சபை அறிக்கையில் கம்பனியின் பிரதான வினை நெறிகள் பற்றிப் போதியளவு விபரிக் கப்படல்வேண்டும்.

பேரளவு பங்காண்மை (Substantial Share Holdings)

ஒரு கம்பனியின் பங்குகளில்' பாரிய தொகைகளை ஒருவர் அல்லது ஒரு குழுவினர் கொண்டிருந்தால் அல்லது அவற்றின் வாயிலாக நலன் பெறுவோர் என்ற வகையில் அக்கறை கொண்டிருந்தால் அவர்க ளின் விபரக்கூற்று ஒன்று அறிக்கையில் சேர்க்கப்படல் வேண்டும். ஐந்தொகைத் திகதியில் இத்தகையோரின் பங்குகளின் அளவு யாதென விபரிக்கப்படல் வேண் டும்.

ஐந்தொகை திகதியின் பின் நிகழ்ந்த பாதிப்புறு சம் பவங்கள் (Material Post Balance Sheet events)

ஐந்தொகை திகதியின் பின்னர் கம்பனியை அல் லது அதன் துணை நிறுவனங்களைப் பாதிக்கக்கூடிய விதத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வுகள் பற்றிய விப ரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். ஐந்தொகை யில் காட்டப்பட்ட நிலைமையில் மாற்றங்களை அல் லது தாக்கங்களை இத்தகைய நிகழ்வுகள் ஏற்படுத்து மாயின் அந்நிகழ்வுகளின் தன்மை, அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளின் மதிப்பு, வரி மாற்றங்கள் என் பவை விபரிக்கப்படல் வேண்டும். ஐந்தொகை திகதி யின் பின்னர் பாதிப்புறு மாற்றங்கள் ஏதும் ஏற்ப டாத இடத்து அதுபற்றியும் குறிப்பிடல் வேண்டும்.

கணக்காய்வாளரின் மீள் நியமனம் (Re - appointment of auditors)

கணக்காய்வாளரை மீள நியமிப்பது பற்றிய தீர் மானம்பற்றி அறிக்கையில் குறிப்பிடல்வேண்டும்.

முடிவுரை

கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்திருக்கும் அனைவருக்கும் கணக்கியல் அறிவோ அல்லது நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யும் அறிவோ இருக்கக் கூடும் என எதிர்பார்க்க முடியாது. எனினும் கம்பனி யில் பண முதலீடு செய்தவர்கள், இனி முதலீடு செய்ய இருப்பவர்கள் கம்பனியின் நிதி, தொழில் நிலைமை, அதன் வருங்காலம் போன்றவை பற்றி அறிய ஆவல் கொண்டிருப்பது இயற்கையே. இத்தகைய தகு வல்களை உள்ளடக்கியதாக இயக்குனர் அறிக்கை அமை வதற்குக் கம்பனிகள் சட்டத்தின் 132ஆம் பிரிவின் வாயிலாகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் சம்பந்தப் பட்டோரின் நலனைப் பாதுகாப்பனவாக அமைகின்றன.

# பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு —தசாப்த காலச் சாதனைபற்றிய ஒரு நோக்கு

## (GREATER COLOMBO ECONOMIC COMMISSION —ACHIEVEMENTS OVER A DECADE - A VIEW)

கு. கல்வளை சேயோன்

### முகவுரை

1987ம் ஆண்டின் 4-ம் இலக்கப் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு இவ்வாண்டு மார்ச் மாதம் 9 – ம் திகதி தனது முதல் தசாப்த நிறைவைக் கொண்டாடியது. சுதந்திர வர்த்தக வலயமெனவும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயமெனவும், ஏற்றுமதிக்குப் பதனிடும் வலயமெனவும் அழைக்கப்படும் பிரதேசங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இச்சட்டத்தின் வாயிலாக இக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வலயங்களில் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு இக்குழுவின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்பதுடன் இக்குழுவுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்வதும் சட்டமுறையான கடப்பாடாகும். இவ்வாறு ஆரம்பிக்கப்படும் முயற்சிகட்குப் பல்வேறு வகை ஊக்குவிப்புகளும், விடுகைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பரந்த அதிகாரம் கொண்ட குழு ஏற்படுத்தப்படுவதை அவசியமாக்கிய பின்னணியை உற்று நோக்கி, தனது குறிக்கோள்களை எய்துவதில் கடந்த ஒரு தசாப்தத்தில் இக்குழு எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பின்னணி

அந்நியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாகவே தொடர்ந்து அமைந்திருந்தது. சுதந்திரத்தின் பின்னர் இறக்குமதிப் பிரதியீட்டினை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி விரகினை இலங்கை அரசு கைக்கொண்டது. இறக்குமதிகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டன. முக்கிய துறைகளில் உற்பத்தி முயற்சியை அரசு தானே மேற்கொண்டது. வர்த்தகம், நிதி சார்ந்த அனைத்துத் துறைகளும் அரசின் நேரடிக் கட்டுப்பாடுகட்கு உட்படுத்தப்பட்டன. இக்கொள்கைகளின் பயனாக பொருளாதார அமைப்பில் கணிசமான மாற்றம் ஏற்படலாயிற்று. ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் ஆரம்பப் பொருட்களைப் பதனிடுவதைத் தவிர வேறெந்த கைத்தொழில்களும் காணப்படாத பொருளாதார அமைப்பில் உற்பத்திக் கைத்தொழில்கள் மெதுவாக வளர்ச்சி அடையத் தொடங்கின. பின்னர் இறக்குமதிப் பிரதியீட்டுப் பொருட்களும், இடைத்தரப் பொருட்களும் கூட உள்ளூரில் உற்பத்தி செய்யப்படலாயின.

எனினும் இந்த வகையான கைத்தொழில் விரகில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளின் விளைவாக விரைந்த கைத்தொழில் விரிவாக்கம் ஏற்படாது போய்விட்டது. மூலதனச் செறிவு கொண்டனவாக அமைந்த இக் கைத்தொழில்கள் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்த அளவுக்கும் உதவவில்லை. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலே இவை பெருமளவுக்குத் தங்கியிருந்தன. ஆரம்பத்தில் இவ்வாறு தொடங்கப்பட்ட கைத்தொழில்கள் பாரிய வர்த்தக நிலையங்களாலேயே தாபிக்கப்பட்டன. இந்நிலையங்கள் இதுவரை தாம் இறக்குமதி செய்து வந்த நுகர்பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்யவதிலேயே அக்கறை காட்டின. இதனால் உயர் வருமானம் பெறும் உள்ளூர் நுகர்வோரின் தேவைகளை ஈடுகட்டக் கூடியனவாகவே இக் கைத்தொழிகள் அமைந்தன. அதே வேளையில் இந்த உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு கட்டுப்பாடுகளும் நடைமுறையில் இருந்தன. இவற்றின் மொத்த விளைவாக, திறனின்மையின் (inefficiency) மேல் மட்டத்திலேயே நிச்சயமான சந்தை வாய்ப்புகளை இந்த உற்பத்திகள் அனுபவிக்கக்கூடிய நிலை நிலவியது.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

அத்துடன் கைத்தொழில் முயற்சிகளுட் பல அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட்டிருந்தமையால் மூலவளப் பகிர்வுகளில் (Resource allocation) தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் பொதுச் சேமிப்பையும் பாதித்து அதன் விளைவாகப் பாதீட்டுப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தலாயிற்று.

மறுபுறத்தில் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் இறக்குமதிப் பிரதியீட்டு விரகு கருதிய பயனை ஏற்படுத்தவில்லை. பிரதியீட்டுக் கைத்தொழில்கள் காணப்பட்டமையால் நுகர் பொருட்களுக்கான இறக்குமதிக் கேள்வி பெருமளவில் திருப்திசெய்யப் பட்டது என்பது என்னவோ உண்மைதான். எனினும் பொருட்களின் உற்பத்திச் செலவு உலக சந்தை விலைகளுடன் எவ்விதத்திலும் ஒப்பிடப்படமுடியாதவாறு அதிகரித்துக் காணப்பட்டது. மறுபுறத்தில் உற்பத்தியின் மிகச் சிறிய பங்கே ஏற்றுமதி செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மூலதனப் பொருட்களில் இக் கைத்தொழில்கள் பெருமளவில் தங்கியிருந்தன. இதன் விளைவாக ஏதாவது ஒரு காரணத்துக்காக இறக்குமதிகளின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமாயின் அது உள்ளூர் உற்பத்திகளையும் மோசமாகப் பாதிக்கக்கூடிய நிலை நிலவியது. இந்நிலையில் ஏற்றுமதி விரகு கொண்டதாக கைத்தொழிற் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று. இல்லாவிடின் கைத்தொழில் வெளியீட்டில் தேக்கநிலை ஒன்று உருவாகக் கூடிய அபாய அறிகுறிகள் தென்பட்டன.

இத்தகைய பின்னணியிலேயே புதிய கொள்கைத் தொகுதி ஒன்று 1977ல் வகுக்கப்படலாயிற்று.

### புதிய கொள்கைத் தொகுதியின் உட்கூறுகள்

இறக்குமதிப் பிரதியீட்டு கைத்தொழில் விரகின் பலவீனங்களாக கைத்தொழில் முயற்சிகளில் அரசின் நேரடி ஈடுபாடும் கைத்தொழில்கட்கு அரசு வழங்கிய மிதமிஞ்சிய பாதுகாப்புக்களும் இனங் காணப்பட்டன. இவற்றின் விளைவாகப் பொருட்கள் சந்தையிலும் காரணிகள் சந்தையிலும் மூலவளங்கள் திறனற்ற ரீதியில் பங்கீடு செய்யப்படுதல் தவிர்க்க முடியாததாகின்றது. இக்குறைபாட்டினைப் போக்க வேண்டுமெனில் கட்டுப்பாடுகளை அகற்றுதலே (de-control) உகந்த வழி என உணரப்பட்டது. இத்தகைய முறையின் கீழ் மூலவளங்களின் பங்கீடு நேரடிக் கட்டுப்பாடுகளால் அன்றி சந்தை சக்திகளாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. இவ் அடிப்படையில் வகுக்கப்பட்ட புதிய கொள்கைத் தொகுதி பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது.

1. இறக்குமதி, வர்த்தகம், அவற்றுக்கான செலுத்துமதிகள் என்பவற்றைத் தாராளமயமாக்கல்; நாணயமாற்று விகிதத்திலும் இறுப்புக் கட்டமைப்பிலும் (Tariff) சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல்.

2. விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல்.

3. நேரடி அந்நிய முதலீட்டைக் கவரக்கூடிய வழிமுறைகளைக் கைக்கொள்ளல்.

4. கைத்தொழில் மற்றும் ஏனைய துறைகளில் அரசதுறை விரிவாக்கத்தைக் குறைப்பதுடன் ஏற்கனவே அரசுடமையாக உள்ள முயற்சிகளதும் செயற்பாடுகளை அர்த்தபூர்வமானதாக மாற்றியமைத்தல்.

5. ஏற்றுமதி அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்தல்.

புதிய கொள்கைத் தொகுதியைக் கைக்கொண்டதைவிட மேலதிகமாக அரசாங்கம் திரை மறைவில் சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இவற்றின் காரணமாகத் தீவிரவாதப் போக்குக் கொண்ட தொழிற்சங்கங்கள் மறைமுகமாக ஒடுக்கப்படலாயின. தொழிலமைதியின்மை (Labour unrest) ஏற்பட முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டது. தொடர்ச்சியான கைத்தொழில் அமைதி நிலை (Industrial peace) உருவாக்கப்பட்டது.

மேற்கூறிய தொகுதியில் அடங்கிய கொள்கைகள் அவற்றின் தூயவடிவில் கைக்கொள்ளப்பட்டன எனக் கூறமுடியாது. தேவைக்கு ஏற்ப அவை மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எனினும் 1977ன் பின்னர் கைக்கொள்ளப்பட்ட கைத்தொழிற் கொள்கை அதற்கு முற்பட்ட இருதசாப்த காலங்களிலும் கைக்கொள்ளப் பட்ட கொள்கை நெறிக்கு முற்றிலும் மாறுபட்டதாக அமைந்தமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இக்கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காகப் பல்வேறு நிறுவனங்கள் தோற்றுவிக்கப்படல் அவசியமாயிற்று. இவற்றுள் முதன்மையானது பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவாகும். 'இலங்கைக் குடியரசின் பொருளாதார விருத்திக்கும் எழுச்சிக்கும் அவசியமான' தெனக் கருதப்பட்ட இந்த ஆணைக்குழு இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகத் தோற்றுவிக்கப்பட்டது.

குறிக்கோள்கள்

இந்த ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் கீழ் வருமாறுய் அமைந்தன:-

1. இலங்கையின் பொருளாதார விருத்தியைப் பேணி வளர்த்தலும் உருவாக்குதலும்.

2. இலங்கையின் பொருளாதார அடித்தளத்தை விரிவுபடுத்தலும் பலப்படுத்தலும்.

3. நாட்டுக்குள் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்.

4. வெளிநாட்டுச் செலாவணி மூலங்களைப் பன்முகப் படுத்தல்.

5. நாட்டினுள் கைத்தொழில் முயற்சிகளும் வர்த்தக முயற்சிகளும் தாபிக்கப்படுவதையும் ஊக்குவிக்கப்படுவதையும் மேம்படுத்தலும் பேணிவளர்த்தலும்.

அதிகாரங்கள்

சட்ட முறையாக இக்குழு பெற்றுள்ள அதிகாரங்களை விரிவாக விளக்குதல் இக்கட்டுரையின் நோக்கமன்று. மேற்கூறிய குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான பரந்த அதிகாரங்களைக் கொண்டதாக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தனக்கென ஒரு இடப்பரப்பை வகுக்கவும், அதன்மீது நியாயாதிக்கம் செலுத்தவும் இக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. அத்துடன் உரிமம் (Licence) பெற்ற ஏதாவது தொழில் முயற்சியின் மீதும் இதனுல் தனது நியாயாதிக்கத்தைச் செலுத்த முடியும். இந்த வகையில் தொழில் முயற்சிகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும் வலுவும் இக்குழுவுக்கு உண்டு. இவ்வாறு தன்னுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் தொழில் முயற்சிகட்குக் குறிப்பிட்ட சட்டங்களிலிருந்து விலக்கு அளிப்பதற்கான அதிகாரமும் இக்குழுவுக்கு உண்டு.

இக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களே இக்கட்டுரையின் முகவுரையில் குறிக்கப்பட்ட வலயங்களாகும்.

வலயங்கள்

தனது குறிக்கோள்களை நிறைவு செய்வதற்காகக் கொழும்பை அண்மித்த பகுதியில் 185 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசத்தைத் தனது நியாயாதிக்கம் நிலவும் இடப்பரப்பாக இக்குழு தேர்ந்தெடுத்தது. இந்த இடப்பரப்பினுள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அண்மையில் விளைதிறன் குறைந்த தென்னந்தோட்டங்களை உள்ளடக்கிய 475 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் தனது முதலாவது வலயத்தை இக்குழு அமைத்தது. இந்த வலயத்தைப் பின்வரும் சிறப்பான குறிக்கோள்களுடன் இக்குழு அபிவிருத்தி செய்யலாயிற்று:-

1. ஏற்றுமதி நோக்கம் கொண்ட வெளிநாட்டு முதலீட்டை மேம்படுத்தல்

2. வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்

3. ஏற்றுமதி வருவாய்களைப் பெருக்குதல்

இவற்றை எய்துவதற்கேதுவாகத் தொழில் முயற்சிகள் வலயத்தினுள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னேடியாகக் காணியைத் துப்பரவு செய்தும் வீதிகள், வடிகால்கள் என்பவற்றை அமைத்தும்; மின்சாரம், நீர் போன்றவற்றை வழங்கியும்; தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் – மொத்தத்தில் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமான நிலையில் வலயத்தை இவ்வாணைக்குழு அபிவிருத்தி செய்தது.

இந்த வலயத்தில் உற்பத்தி முயற்சிகளை மேலும் ஆரம்பிப்பதற்கு இட நெருக்கடி தோன்றிய நிலையில் கொழும்புத் துறைமுகத்துக்கு 24 மைல்களுக்கு அப்பாலுள்ள வரலாற்றுப் புகழ் மிக்க பியகம என்னுமிடத்தில் மேலும் ஒரு 450 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது வலயம் ஒன்றினை அபிவிருத்தி செய்து வருகின்றது. 1983ஆம் ஆண்டின் ஈற்றில் இந்த வலயத்தில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாயின. முதற் கட்ட அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 18 மாத காலத்தினுள் தொழில் முயற்சிகட்கு வழங்கப்படக்கூடிய அனைத்து இடப்பரப்பும் வழங்கப்பட்டு முடிந்துவிட்டது. 1990ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த இரண்டாம் கட்டமும் இந்த ஆண்டிலேயே நிறைவு செய்யப்பட வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இந்த இரண்டு வலயங்களின் அபிவிருத்திக்கென ரூ. 500மி. ஐ குழு மேந்தலைச் செலவாக முதலிட்டுள்ளது.

இரண்டாவது வலயத்திலும் இட நெருக்கடி தோன்றியுள்ளமையால் மூன்றுவது வலயம் ஒன்றினை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை இக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை இலங்கையின் தென்புறத்தே காலிக்கு அண்மையில் அமைப்பதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1986ஆம் ஆண்டின் ஈற்றில் இவ்வாணைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தவற்றுள் 91 முயற்சிகள் வர்த்தக ரீதியான உற்பத்திகளை மேற்கொண்டிருந்தன. இவற்றுள் 68 கருத்திட்டங்கள் கட்டுநாயக்க வலயத்திலும், நான்கு பியகம வலயத்திலும்,

19 முயற்சிகள் வலயங்கட்குப் புறத்தேயும் உற்பத்திகளை மேற்கொண்டிருந்தன. 1987ம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் எல்லாமாக 100 முயற்சிகள் வர்த்தக ரீதியிலான உற்பத்திகளை மேற்கொண்டிருந்தன. 27 நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் 40 வெவ்வேறு வகையான பொருட்களை ஏற்றுமதிக்காக உற்பத்திசெய்து வருகின்றன. இந்த 100 நிறுவனங்களதும் மொத்த முதலீடு ரூபா 12.5 பி. ஞகும்.

#### சாதனைகளும் அவைபற்றிய திறனாய்வும்

இக்குழுவின் முயற்சிகள் காரணமாகக் கடந்த பத்து ஆண்டு காலத்தில் எமது நாட்டின் கைத்தொழிற் பரம்பல், முதலீடு, உற்பத்தி, வேலைவாய்ப்புகள், ஏற்றுமதி வருமானம், அந்நியச் செலவாணிச் சேமிப்புகள் போன்ற பல்வேறு துறைகளில் ஆழமான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை இக்குழுவின் செயற்பாட்டினுல் ஏற்பட்ட சாதனைகள் எனலாம்.

1987ம் ஆண்டின் முடிவில் 242 கைத்தொழில் திட்டங்களுக்கான அங்கீகாரத்தை இக்குழு வழங்கி இருந்தது. திட்ட ஆலோசனைகளின்படி இம்முயற்சிகளில் ரூ. 11 பி. முதலீடு மேற்கொள்ளப்படுமென்றும் அவற்றுள் ரூ. 8 பி. அந்நியச் செலாவணி முதலீடாக இருக்குமென்றும் விபரிக்கப்பட்டுள்ளது. குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற கைத்தொழில் முயற்சிகள் உற்பத்தியை ஆரம்பிக்க முன்னர் இக்குழுவுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டும் 1987ம் ஆண்டின் ஈற்றில் இக்குழுவுடன் 133 தொழில் முயற்சிகட்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் 100 முயற்சிகள் வர்த்தக ரீதியில் அல்லது பரீட்சார்த்த அடிப்படையில் உற்பத்திகளை ஆரம்பித்து இருந்தன. இந்த உற்பத்திகளால் கடந்த 10 ஆண்டுகளில் ஈட்டப்பட்ட ஏற்றுமதி வருமானம் ரூ. 25 பி. ஞகும். இவற்றுள் இறக்குமதிகட்கான உள்ளீடுகளின் பெறுமானம் நீங்கலாக நாட்டுக்குக் கிடைத்த நிகர அந்நியச் செலாவணிச் சேமிப்பு ரூ. 7 பி. ஞகும். இந்த வகையிலே இக்குழு மேந்தலைச் செலவுகட்காக இட்ட ரூ. 500 மி. முதலீடு 10 ஆண்டுகட்குள் 13 மடங்கு விளைவினை ஏற்படுத்தியுள்ளமை கவனிக்கத் தக்கது.

1988 பெப்ரவரி மாத ஈற்றில் இக்குழு முயற்சிகளில் 51,000 பேர் வேலை வாய்ப்புகளை ஈட்டியுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குழுவின் முயற்சிகளுள் கைத்தொழில் வேலைவாய்ப்பு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு ஏற்படும் செலவு ரூ. 15,000/- என்றும் அதற்குப் புறத்தே அதற்கு ஏற்படும் செலவு ரூ. 150,000 என்றும் இவ்வாணைக் குழுவால் மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்துக்கு எதுவித மேந்தலைச் செலவுகளுமின்றித் தனது சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டத்தின்கீழ் இதே காலப் பகுதியில் 42,000 வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதற்குத் தான் காரணராக இருந்துள்ளதாகத் தேசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது. எவ்வாறெனினும் ஆணைக் குழுவின் முயற்சிகளின் விளைவாக ஒழுங்குபடுத்தப்பட்ட துறையுள் கணிசமான வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருத்தல் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்ருகும். நேரடி வேலைவாய்ப்புக்களுடனமையாது மறைமுக வேலைவாய்ப்புக்களும் இக்குழுவின் முயற்சிகளால் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த விகிதாசாரம் 1 : 3 என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையில் 150,000 மறைமுக வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே குறைந்த செலவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளமை இக்குழுவின் சாதனைகளில் ஒன்ருகக் கருதப்படுகின்றது.

1978ம் ஆண்டில் இக்குழுவின் முயற்சிகள் தொடக்கப் பெற்ற ஆரம்ப காலத்தில் புடவை, தயாரித்த ஆடைகள் கைத்தொழில்களே பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் உற்பத்தியை மேற்கொண்டிருக்கும் 100 முயற்சிகளில் 28 புடவை மற்றும் தயாரித்த ஆடைகளை உற்பத்தி செய்வனவாகவே காணப்படுகின்றன. 1979ல் தயாரித்த ஆடை ஏற்றுமதியால் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ரூ. 145 மி. ஞகும். இது 1986ல் ரூ. 4.5 பி. ஞக அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டு காலத்தில் மொத்தமாக ரூ. 18. பி அந்நியச் செலாவணி உழைப்புக்கு இத்துறை காரணமாக இருந்துள்ளது. 1986ன் முடிவில் 34,000 பேருக்கும், 1987இன் முடிவில் 38,000 பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்கிய துறையாகவும் இது உள்ளது. குழு முயற்சிகள் அனைவற்றுலும் வழங்கப்பட்ட நேரடி வேலை வாய்ப்புக்களில் 1985ல் 82.06%மும், 1986ல் 81.55%மும் இத்துறையால் வழங்கப்பட்டிருந்தது. அதைப்போலவே மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 1985ல் 80.28%மும் 1986இல் 82.81%மும் இத்துறையால் ஈட்டப்பட்டிருந்தன. இக்குழு முயற்சிகளுள் இத்துறை பாரிய துறையாகக் காணப்பட்டபோதும் இக்குழுவின் செயற்பாட்டுக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் முக்கிய கண்டனமாக அமைவதும் இதுவே. புடவை மற்றும் தயாரித்த ஆடைகள் சார்பில் பக்கச்சார்பு (bias) காட்டப்படுவதாக இக்கண்டனம் அமைகின்றது. இந்த வகையிலே 1985ன் பின்னர் முதலீடுகட்கு அனுமதியளிக்கும்போது இவ்வாணைக்குழு புடவை, தயாரித்த ஆடைகள் துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதில்லை. 1986ல் எல்லாமாகப் பத்து முயற்சிகட்கு

இக்குழு அங்கீகாரம் வழங்கியது. அவற்றுள் ஒன்றே ஒன்று மட்டுமே இத்துறையைச் சார்ந்ததாகும். இக் குழு குறித்த ஒரு துறையை நோக்கிய முதலீட்டுக் குவிப்பை ஊக்குவிக்கின்றது என்ற கண்டனம் கவனத்துக்கு எடுக்கப்பட்டுத் தற்போது பல்வேறு வகையான தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது ஊக்குவிககப் படுகின்றது.

புடவை மற்றும் தயாரித்த ஆடைகள் துறை தவிர்ந்த ஏனைய துறைகளிலும் பாரிய அளவு முதலீடுகள் இடப்பட்டிருப்பதுடன் அவற்றால் கணிசமான அளவு ஏற்றுமதி வருமானமும் உழைக்கப்படுகின்றன. இத்தகு தொழில்களுட் சிலவற்றை இனி நோக்குவோம்.

சிறிய பொறியியல் பொருட்களின் (Light Engineering) உற்பத்தியில் ரூ. 88 மி. முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1987ல் இத்துறைத் தொழில்களிலிருந்து ரூ. 126 மி. ஏற்றுமதி வருமானமாகப் பெறப்பட்டிருந்தது. 600 பேருக்கு இத்துறை வேலை வாய்ப்பினை வழங்கி வருகின்றது. யப்பானின் பாரிய மோட்டார் வாகன உற்பத்தியாளரான ரொயோட்ரா (Toyota), நிசான்(Nissan) போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரித்து வழங்கும் நிறுவனம் ஒன்று தற்போது ஆலை ஒன்றினை அமைத்து வருகின்றது. வடிவமைப்பு, உற்பத்தி என்பவற்றில் முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்டதாக இந்த ஆலை அமையும்.

உயர்ந்தரக இயற்கை இறப்பரை உற்பத்தி செய்யும் நாடாக இலங்கை விளங்கியபோதும் அண்மைக் காலம்வரை மூலப்பொருளாகவே உலக சந்தைக்கு அது இறப்பரை ஏற்றுமதி செய்து வந்துள்ளது. இயற்கை இறப்பரை மூலப்பொருளாகக் கொண்டு ஆணைக்குழுவின் வலயங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களால் எமது ஏற்றுமதி வருமானம் ரூ. 1 பி. னால் அதிகரித்துள்ளது. அத்துடன் 2000 பேருக்கு வேலை வாய்ப்பும் கிட்டியுள்ளது.

வரலாற்று ரீதியில் இரத்தினக் கற்களுக்கு எமது நாடு புகழ் பெற்றதாக இருந்தபோதும் கற்களை வெறுமனே ஏற்றுமதி செய்தே நாம் அந்நியச் செலாவணியை ஈட்டிவந்துள்ளோம். நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இக்கற்களைப் பட்டை தீட்டி மெருகேற்றும் தொழில் முயற்சிகள் வலயங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வைரங்களைப் பட்டை தீட்டுதல், மெருகேற்றுதல் தொடர்பான பணிகளும் இத்தொழிற்கூடங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. 1500 பேருக்கு வேலைவாய்ப்பையும் ரூ. 500 மி. அந்நியச் செலாவணி உழைப்பையும் இத்துறை பெற்றுத் தருகின்றது.

உஷ்ண வலயத்தில் காணப்படும் அழகு தாவரங்களை (foliage plants) ஏற்றுமதிக்காகத் தயாரிப்பதும் இவ் வலயத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. ஆண்டு தோறும் ரூ. 26 மி. வருமானத்தை இத்துறைமூலம் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இத்துறையில் தற்போது ரூ. 36 மி. முதலீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலை முயற்சிகட்கு மட்டுமின்றி குடிசைக் கைத்தொழில்கட்கும் இக்குழுவின் செயற்பாடு காரணமாக அதிகளவில் ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. பிரம்பினால் ஆக்கப்படும் பொருட்கள், செயற்கை மலர்கள், கயிற்றுப் பொருட்கள் உட்படப் பல்வேறு பொருட்களின் உற்பத்திக்கென ரூ. 1.1 பி. முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றால் ஆண்டுதோறும் ரூ. 600 மி. அந்நியச் செலாவணி உழைக்கப்படுவதுடன் 9000 பேருக்கு வேலைவாய்ப்பும் கிட்டியுள்ளது.

சுருங்கக் கூறின், ஆரம்ப காலத்தைப் போலன்றி தற்போது இக்குழுவின் முயற்சிகளால் பல்வேறுவகை உற்பத்திகளும் மேற்கொள்ளப்படுகின்றன. உணவு பதனிடுதல், பானவகைகள் தயாரிப்பு, புகையிலையை மூலப்பொருளாகக் கொண்ட தொழில்கள், இறப்பர் பொருட்கள், மரப் பொருட்கள்,இரசாயனப் பொருட்கள், ஆபரணத் தயாரிப்பும் கற்களுக்குப் பட்டை தீட்டுதலும், இலக்ரோனிக் பொருட்கள், பாத அணிகள், தோற் பொருட்கள், பி. வீ. சி. குழாய்கள் போன்ற பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

கொழும்புத் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள கப்பல்களைப் பழுதுபார்க்கும் உலர் மேடைகள் (Dry Docks) பியகமவில் அமைக்கப்பட்டுள்ள நாணயத் தாள்களையும் ஏனைய பாதுகாப்பு ஆவணங்களையும் அச்சிடும் பிரட்பரி வில்கின்ஸன் (Bradbury Wilkinson) நிறுவனம் என்பவை சேவைகள் ஊடாக அந்நியச் செலவாணி உழைப்பை ஈட்டித்தரும் ஆணைக்குழு முயற்சிகளாம்.

இந்த வகையில் நோக்கும்போது எமது கைத் தொழிற் தளத்தை விரிவுபடுத்துவதில் இக்குழுவின் பங்களிப்புக் கணிசமாக இருந்திருப்பது புலனாகின்றது. அதேவேளையில் அந்நியச் செலவாணி உழைப்பையும் அது பெற்றுத் தந்துள்ளது. உற்பத்திகளையும் ஏற்றுமதிகளையும் பன்முகப்படுத்துவதில் அது பெருமளவுக்கு உதவியுள்ளது.

எனினும் தொழில்நுட்ப மாற்றத்தைப் (technology transfer) பொறுத்தவரை குழு முயற்சிகளின் பங்களிப்புப் போதுமானதாகக் கருதப்பட முடியாது. கைத்தொழில்களுட் பெரும்பாலானவை உயர்தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவை அல்ல. ஆடைக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் மிக உயர்ந்த தொழில் நுட்பம் கைத்தொழில் ரீதியான தையல் யந்திரங்களே.

இக்குழுவின் நிர்வாகத்தின்கீழ் ஆரம்பிக்கப்படும் முயற்சிகட்கு மிகவும் அதிகமான ஊக்குவிப்புகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பின் வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. மொத்த முதலீட்டில் அந்நிய முதலீட்டாளர் எதுவித உச்சவரம்பும் இன்றிப் பங்கேற்கலாம்.

2. இலங்கைக்குள்ளோ வெளியிலோ முதலீடுகளை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி மாற்றலாம்.

3. இத்தகைய மாற்றங்கட்கு எதுவித வரியும் செலுத்தவேண்டியதில்லை. அத்துடன் இவைகட்குச் செலவாணிக் கட்டுப்பாடுகளும் கிடையாது.

4. வதிவற்ற பங்குரிமையாளருக்கு வழங்கப்படும் பங்கிலாபத்துக்கு வரிகள் விதிக்கப்பட மாட்டா. அத்துடன் அவை செலாவணிக் கட்டுப்பாடுகட்குள் உட்படுத்தப்படவும் மாட்டா.

5. பொறிகள், உபகரணங்கள், நிர்மாணப் பொருட்கள், மூலப்பொருட்கள் என்பவற்றுக்கு இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்படமாட்டா.

6. இத்தகைய இறக்குமதிகளும், இந்நிறுவனங்களின் ஏற்றுமதிகளும், இறக்குமதி மற்றும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகட்கு உட்படுத்தப்படமாட்டா.

7. மூலதனம் மாற்றஞ் செய்யப்படுமிடத்து அதற்கும் அந்நியச் செலவாணிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படமாட்டா.

இவற்றைவிட பல்வேறு வரிச்சலுகைகள் வழங்கப்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு:-

1. வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், நிகர அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம், புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தல், புதிய சந்தைகட்கு ஏற்றுமதிகளைச் செய்தல் என்பனவற்றைப் பொறுத்து 2-10 ஆண்டுகட்கு பூரண வரி விடுமுறை.

2. இம்முயற்சிகளில் தொழிலாற்றும் பிறநாட்டினருக்கு வழங்கப்படும் ஊதியத்துக்கு வருமானவரி விதிக்கப்படமாட்டாது.

3. ஆக்கவுரிமைகட்கு (Royalties) வரிவிடுமுறை.

4. பங்கிலாபங்கட்கு வரி விதிக்கப்படமாட்டாது.

வரி விடுமுறைக்காலம் முடிந்த பின்பும் மேலும் 15 ஆண்டுகட்குச் சலுகை அடிப்படையிலேயே வரி விதிக்கப்படும். இத்தகைய சலுகைகள் வேறுவகை முயற்சிகட்கு வழங்கப்படவில்லை. பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு முயற்சிகட்குப் புறத்தேயான அந்நிய முதலீடுகளை அங்கீகரிப்பது அந்நிய செலவாணி மதியுரைக்குழு (Foreign Investments Advisory Committee) ஆகும். இக்குழுவின் முயற்சிகட்கு வழங்கப்பட்டுள்ள ஊக்குவிப்புகளும், சலுகைகளும் மிக அற்பமானவையே. இருப்பினும், இக்குழு முயற்சிகளின் சாதனை மற்றதைவிடச் சிறப்பானதாக அமைந்துள்ளதென்றே கூறல் வேண்டும். மேற்கூறிய பல்வேறு சலுகைகளையும் விடுவிப்புகளையும் அனுபவிக்கும் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு முயற்சிகள் 1986ன் முடிவில் 41614 வேலைவாய்ப்புக்களை வழங்கியிருப்பதுடன் ரூ. 5.4 பி. ஏற்றுமதி வருமானத்தையும் ஈட்டித் தந்துள்ளன. அதே நேரத்தில் அந்நியச் செலாவணி மதியுரைக் குழு முயற்சிகள் 43,667 வேலைவாய்ப்புக்களை வழங்கியிருந்ததுடன் ரூ. 3.2 பி. அந்நியச் செலாவணிச் சம்பாத்தியத்தையும் ஈட்டித் தந்திருந்தன. இந்தவகையில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு முயற்சிகட்கு வழங்கப்பட்ட சலுகைகளின் பொருளாதாரப் பெறுமதியுடன் ஒப்பிடும்போது அவற்றின் சாதனைகள் நியாயப்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி பிறக்கின்றது.

அத்துடன் தனது வலயங்களில் தொழில் புரியும் ஊழியர்கட்குப் போதிய குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் குழு போதிய அக்கறை காட்டியிருக்கவில்லை. வீடமைப்புக்கெனச் சர்வதேச ஆண்டு ஒன்று பிரகடனப்படுத்தப்படுவதற்குக் காரணமாய் அமைந்த ஒரு நாட்டில் தொழிலாளர் நலன் இந்தளவுக்குப் புறக்கணிக்கப்படுதல் குழுவுக்கு இழுக்கைத் தேடித் தருவதாகவே அமைகின்றது.

முடிவுரை

எனினும், பாரம்பரியமாக ஏற்றுமதி - இறக்குமதி பொருளாதாரமாகவும், ஆரம்பப் பொருள் ஏற்றுமதி நாடாகவும் விளங்கிய எமது நாடு 1977ம் ஆண்டின் கொள்கைத் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் வித்தியாசமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

இதுவரை எமது ஏற்றுமதி வருமானத்தின் பெரும் பகுதியை ஈட்டித்தரும் தனியொரு அம்சமாக முதன்மை பெற்று விளங்கிய தேயிலை தற்போது இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது. முதலாம் இடத்தைப் புடவை மற்றும் தயாரித்த ஆடைகள் என்ற அம்சம் ஆக்கிரமித்து விட்டது. 1986 ல் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இவை 28.3%மான வற்றை ஈட்டித் தந்தன. தேயிலை 27.2% மான ஏற்றுமதி வருமானத்தை மட்டுமே ஈட்டித் தந்தது. 1987இன் முதல் 10 மாதங்களில் இந்நிலை மேலும் அபிவிருத்தி அடைந்தது. இக்காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 31.37 % புடவை மற்றும் தயாரித்த ஆடைகள் என்பதிலிருந்தும் 26.68% தேயிலையிலிருந்தும் கிடைக்கப்பெற்றன.

அத்துடன் 1986ல் வெளிப்படுத்தப்பட்ட மற்றுமொரு முக்கிய அறிகுறியும் கவனிக்கற்பாலது. 1985 வரை எமது மொத்த ஏற்றுமதிகளுள் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியே பிரதான இடத்தை வகித்தது. 1986ல் கைத்தொழில் ஏற்றுமதிகள் விவசாய ஏற்றுமதிகளை மிக நுண்ணிய அளவால் மிஞ்சிவிட்டன. 1985இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் 39.5% மாகவும் விவசாய ஏற்றுமதிகள் 52.5% மாகவும் அமைந்திருந்தன. 1986ல் முன்னையது 46.6% ஆகவும் பின்னையது 46.3% ஆகவும் மாற்றம் பெற்றது. 1987இன் முதல் 10 மாதங்களில் இந்நிலையில் மேலும் சீர்திருத்தம் தென்படுகின்றது. விவசாய ஏற்றுமதிகள் 43.7% மாகவும் கைத்தொழில் ஏற்றுமதிகள் 48.5%மாகவும் அமைந்துள்ளன.

பொருளாதாரத்தின் அடித்தளத்தை மாற்றி அமைப்பதில் நாம் கண்டுள்ள வெற்றியின் அறிகுறி என இது கொள்ளப்படலாமா என்பதே எமக்கு முன்னுள்ள பிரச்சினையாகும். தொடர்ந்து நலிவுறும் பண்டங்களின் விலையால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்படாதிருக்க வேண்டுமெனில் ஆரம்பப் பொருள் ஏற்றுமதி நாடு என்ற நிலையிலிருந்து பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி நாடாக நாம் மாற்றம் பெறல் வேண்டும்.

இதற்கு எமது கைத்தொழில்கள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். வழங்கப்படும் ஊக்குவிப்புகட்குப் பொருளாதாரப் பெறுமதி கணிக்கப்படுமாயின் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு முயற்சிகளது சாதனை மட்டுப் படுத்தப்பட்டதாகவே தென்பட்ட போதிலும் எமது கைத்தொழில் வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு மகத்தானது என்றே கொள்ளப்படல் வேண்டும். தொழில் நுட்ப மாற்றத்தைப் பொறுத்தவரை இக்குழுவின் சாதனை ஏமாற்றம் அளிப்பதாக இருந்தபோதும் அண்மைக் காலத்தில் அனுமதி வழங்கப்பட்ட முதலீடுகளை ஒப்புநோக்கும்போது விரைவில் இத்துறையிலும் இக்குழு முயற்சிகள் ஏற்றம் காணும் என்று நம்புவதற்கு இடமுண்டு.

எவ்வாறெனினும் தவிர்க்க முடியாத தேக்க நிலையிலிருந்து எமது பொருளாதாரத்துக்குத் தேவைப்பட்ட திருப்பு முனையை ஏற்படுத்தித் தருவதில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் முயற்சிகள் நிச்சயமாகப் பெரும்பங்கினை ஆற்றியுள்ளன என்றே கூறல் வேண்டும்.

## ஒன்றிணைவும் திறமையும்

கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் திறமையை உயர்த்துவதற்கு ஒன்றிணைவுகள் எந்தளவுக்கு உதவுகின்றன என்பது சர்ச்சைக்கு உரியதாகவே இருந்து வந்துள்ளது. ரொபின் மாரிஸ் (Robin Maris) என்ற பிரித்தானிய பொருளாதார நிபுணர் கால் நூற்றாண்டுகட்கு முன்னர் ஒன்றிணைவுகள் பற்றிய கோட்பாடு ஒன்றினை முன்வைத்தார்.

உற்பத்திப் பொருட்களுக்கும், தொழில் பற்றிய ஏனைய உள்ளீடுகட்குமான சந்தையின் தோல்வியை சீரமைப்பதில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டுடன் தொடர்பான சந்தை (Market for corporate control) பெருமளவு உதவும் எனவும் போட்டிச் சூழ்நிலையில் உச்ச இலாபத்தை ஈட்டவோ அல்லது கிரயங்களை இழிநிலைவரை குறைக்கவோ தவறும் நிறுவனங்கள் தோல்வியையே தழுவ நேரிடும் எனவும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

தற்காலத்தில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களில் உடைமையாளரே அவற்றைக் கட்டுப்படுத்துபவர்களாகவும் இருப்பதில்லை. தொழில் முறையான முகாமையாளரே (Professional managers) நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி வருகின்றனர். அவர்கள் நிறுவனங்களின் உடைமையாளரல்லர். இவ்விரு திறத்தாரின் நலன்களும் ஒன்றுக்கு ஒன்று பேதப்பட்டால் அது நிறுவனத்தின் திறமையை வெகுவாகப் பாதிக்கும். இந்த வகையில் ஒன்றிணைவுத் திறமையை வளர்ப்பதில் அதிகளவுக்கு உதவக்கூடியனவாகும்.

# மாணவர் மஞ்சரி

● உள்நாட்டுத் தனியார் துறை தேசிய வர்த்தக வங்கிகள் மூன்று தற்போது தொழிலாற்றி வருகின்றன. அவையாவன:-

(1) இலங்கை வர்த்தக வங்கி

(2) அட்டன் தேசிய வங்கி

(3) சம்பத் வங்கி

இவற்றுள் சம்பத் வங்கி மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதாகும். 1987 மார்ச் மாதத்தில் 'முதலீட்டுக் கடன் வங்கி' என்ற பெயரில் ஆரம்பித்த இவ்வங்கி பின்னர் தனது பெயரைச் சம்பத் வங்கி என மாற்றிக்கொண்டுள்ளது. 'சேலான் நம்பிக்கை வங்கி' (Seylan Trust Bank) என்ற பெயரில் மற்றுமொரு உள்ளூர் தனியார் துறை வர்த்தக வங்கி ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

● ஊழியர் சேமலாப நிதியில் காணப்படும் மீதிகளை ஈடாகக்கொண்டு வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு வழிசெய்யக்கூடிய சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. புதிய வீடுகளை அமைத்தல், வீடுகளைப் பழுதுபார்த்தல், வீட்டுக் கொள்வனவு என்பனவற்றுக்கு நிதியின் உறுப்பினருக்குக் கடன் வழங்கப்படும். நிதியில் தனிப்பட்ட உறுப்பினர் பெயரில் காணப்படும் மீதியின் அளவைப்பொறுத்துக் கடன்தொகை வேறுபடும். இந்நிதியில் தற்போது உறுப்புரிமை கொண்டுள்ள 3 மி. மக்களுக்கு இக்கடன்திட்டம் பெருமளவில் உதவும். ஊழியர் சேமலாப நிதி உறுப்பினருக்கு ஒய்வூதியம் வழங்கக்கூடிய திட்டம் ஒன்றும் தற்போது வகுக்கப்பட்டுள்ளது.

● இலங்கைக்கு ஊடாக விமானச் சேவையை நீண்ட நாட்களாக மேற்கொண்டுவந்த சுவிஸ் எயர், கே. எல். எம்., பிரிட்டிஷ் எயர்வேய்ஸ் என்ற முப்பெரும் நிறுவனங்கள் தமது சேவைகளை அண்மைக்காலத்தில் நிறுத்தியுள்ளன. சிங்கப்பூர் எயர் லைன்ஸ் நிறுவனமும் விரைவில் இலங்கைக்கான தனது சேவையை நிறுத்தக்கூடும்.

● ஊழியர் நம்பிக்கை நிதிய உறுப்பினருக்கு அவர்கள் பெயரில் காணப்படும் மீதியும் அதற்கான வட்டியும் மட்டுமின்றி ஆயுட் காப்புறுதி நலன்களும் கிட்டிவருகின்றன. இந்நிதியத்தின் உறுப்பினருக்கு வழங்கப்பட்ட காப்புறுதித் தொகை தற்போது இரண்டுமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. காப்புறுதிக் கட்டணத்தை நிதியமே செலுத்தி வருகின்றது.

● ஊழியர் நம்பிக்கை நிதியம் நாட்டின் பல பகுதிகளிலும் ஊழியர் வங்கிகளை விரைவில் அமைக்கத் திட்டம் இட்டுள்ளது.

● கண்டி, மாத்தளைப் பகுதிகளை அண்டிய நக்கிள்ஸ் மலைத்தொடரில் 3500 அடிக்கு மேற்பட்ட பிரதேசம் காட்டுப் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் ஏலக்காய் பயிர்ச் செய்கைக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. இதனால் 1900 ஹெக்டயர் நிலப்பரப்பில் விவசாயத்தை மேற்கொண்டுவரும் விவசாயிகள் வேறு பகுதிகட்கு அப்புறப்படுத்தப்படவுள்ளனர். காடுகள் விரைவாக அழிக்கப்பட்டு வருவதனால் இயற்கைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைத் தடுத்து நிறுத்துமுகமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

● ஒன்பது பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தற்போது செயலாற்றி வருகின்றன. களுத்துறை, மாத்தறை, குருணாகலை, அனுராதபுர, அம்பாந்தோட்டை, கேகாலை, புத்தளம், காலி, கண்டி ஆகிய பிராந்தியங்களிலேயே இவ்வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. 1987இன் முடிவில் இந்த வங்கிகட்குத் தலைமை அலுவலகங்களையும் உள்ளடக்கிய 52 கிளைகள் காணப்பட்டன.

● இந்திய அரச வங்கி தனது அனுராதபுரக் கிளையை மூடிவிட்டது. பாங் ஒவ் அமெரிக்கா என்ற வங்கி இலங்கையில் தனது நடவடிக்கைகளையும் சேவைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. மேலும் துபாய் வங்கியை மத்திய கிழக்குக்கான யூனியன் வங்கி கொள்வனவு செய்தமையைத் தொடர்ந்து இலங்கையில் துபாய் வங்கியின் கிளை மூடப்பட்டது. இவை யாவும் 1986இல் நிகழ்ந்தவையாகும்.

● 1984 முதல் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கடுமையான நாணயக் கொள்கையை 1987இல் மத்திய வங்கி அவதானமாகத் தளர்த்தியது. பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதும், குறுங் காலத்தில் சந்தைச் சக்திகளின் செயற்பாட்டால் நாணயக் கையாளல் மேற்கொள்ளப்படுவதற்கு வழிவகுப்பதுமே இதன் நோக்கங்களாகும். சட்ட-

முறையான ஒதுக்குத் தேவைகள் படிப்படியாக குறைக்கப் படலாயின. 1986 பெப்ரவரி மாதத்தில் கூறுமுறை ஒதுக்குகள் (Special Reserves under Tranche System) நீக்கப்பட்டன. 1987 ஜூன் மாதம் முதற்கொண்டு பயன்படுத்தப்படாத மிகைப்பற்றுகட்கு எதிரான ஒதுக்குகள் வைத்திருக்கவேண்டிய தேவை அகற்றப்பட்டது. அத்துடன் இதுவரை வெவ்வேறு வகை வைப்புகட்கு வெவ்வேறு விகிதத்தில் ஒதுக்குகள் பேணப்படல் வேண்டும் என்று மத்திய வங்கி விதித்திருந்தது. இதன்படி பல்வேறு வகை வைப்புகட்கு 10% முதல் 18% வரையிலான வேறுபட்ட ஒதுக்கு விகிதங்கள் நிலவின. 87-08-07 முதல் ஒரே சீராக அனைத்து வைப்புகட்கும் 10% மாக ஒதுக்கு விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1987 அக்டோபர் ஈற்றில் அந்நியச் செலாவணி வங்கிக் கூறுகள் ரூ. 17.2 பி. ($566மி.) பெறுமதி கொண்ட வைப்புக்களைத் திரட்டியிருந்தன. அவற்றுள் 59.1% மானவை 3 மாதத்துக்கும் குறைவான முதிர்வுக் காலத்தைக் கொண்டவை. அதே காலப்பகுதியில் இக்கூறுகள் ரூ. 18.3 பி. ($602 மி ) பெறுமதியான கடன்களை வழங்கியிருந்தன. இவற்றுள் 53% மானவை 3 மாத காலத்தினுள் மீளளிக்கப்பட வேண்டியவை. இந்த வகையில் குறுங்கால வைப்புக்களைத் திரட்டுவதிலும் குறுங்காலக் கடன்களை வழங்குவதிலுமே இக் கூறுகள் சிறப்பியல்பு கொண்டிருந்தன எனலாம்.

- 1987 அக்டோபர் 31இல் அந்நியச் செலாவணி வங்கிக் கூறுகளின் மொத்த சொத்துக்கள் / பொறுப்புக்களின் பெறுமதி ரூ. 19.3பி ($632மி.) ஆகும்.

- ஐக்கிய அமெரிக்க நாடுகள் இரண்டாம் உலகப் போரின்போதும் அதன் பின்னரும் வெளிநாடுகளில் பெருமளவு பணத்தைச் செலவிட்டது. இச் செலவினங்கள் யாவும் டொலர் நாணயத்தில் மேற்கொள்ளப்பட்டன. இப்பணம் யாவும் ஐ. அ. நாடுகட்கு வெளியே வதிவோரால் உடைமை கொள்ளப்பட்டன. ஐரோப்பிய வங்கிகள் ஐ. அ. டொலர் நாணயத்தில் வைப்புக்களை ஏற்றன. இவையே இயூரோ டொலர் (Euro Dollar) என அழைக்கப்படலாயின. இதனை ஒத்த முறை ஒன்று ஏனைய நாணயங்களிலும் பின்பற்றப் படலாயிற்று. இதுவே கரைகடந்த வங்கியியல் (Off-Shore Banking) என அழைக்கப்படுகின்றது. வதிவற்றோரிடமிருந்து வைப்புகளை ஏற்பனவும் வதிவற்றோருக்குக் கடன்களை வழங்குவனவுமான நிறுவனங்களே கரைகடந்த வங்கி நிறுவனங்களாம். பொதுவாக, பல்தேசிய கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களே (Multinational Corporation) இவற்றின் வாடிக்கையாளராகக் காணப்படுகின்றனர்.

- அமெரிக்க உள்ளூர் ஆடைக் கைத்தொழிலுக்குக் கவசமாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கமைப்பு ''பல் இழை ஏற்பாடு'' (Multi Fibre Arrangment) ஆகும். இது பொதுவாக கோட்டா முறை என அழைக்கப்படுகின்றது. இந்த ஏற்பாட்டின் கீழ் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் அமெரிக்காவினுள் இறக்குமதி செய்யத்தக்க ஆடைகளின் அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமது உற்பத்திப் பொருட்களுக்கு உறுதியான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக வளர்முக நாடுகளே இந்த ஒதுக்கீடுகளை நாடிநிற்கின்றன. இந்த ஏற்பாட்டின்கீழ்ப் பல்வேறு நாடுகள் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துகொள்கின்றன. இலங்கை முதன் முதலாக 1974ல் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றினைச் செய்தது. தற்போது நடைமுறையில் இருப்பது நான்காவது ஒப்பந்தமாகும். இது 1991இல் முடிவடைந்துவிடும். மீண்டும் ஒரு தவணைக்கு இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுமா? என்பது நிச்சயமில்லை. அவ்வாறு புதுப்பிக்கப் படாவிட்டால் எமக்குப் பெருமளவு அந்நியச் செலாவணியை உழைத்துத்தரும் தயாரித்த ஆடைகள் கைத்தொழில் வெகுவாய்ப் பாதிக்கப்படும்.

எனினும், இந்த ஒப்பந்தம் எவ்வகையிலும் ஒரு உறுதியான ஏற்பாடல்ல, ஒப்புக்கொள்ளப்பட்ட அளவை இறக்குமதி செய்வதில் இடையில் மாறுதல்களைச் செய்வதற்கு அமெரிக்காவுக்கு வசதியளிக்கும் விதிகளை ஒப்பந்தம் கொண்டுள்ளது. உள்ளூர் ஆடை உற்பத்தித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் காட்டி இறக்குமதி அளவை அமெரிக்கா எப்போதும் குறைக்க முடியும். இக் குறைபாடு காணப்பட்டபோதும் பல் இழை ஏற்பாடு வழங்கிய காப்பின் காரணமாகவே சிறிய உற்பத்தியாளர் உலக புடவைச் சந்தையினுள் ஊடுருவ முடிந்தது. தயாரித்த ஆடைகளில் அமெரிக்க இறக்குமதியின் 80%தை வழங்கும் பெரிய உற்பத்தியாளர்களான தென் கொரியா, தாய்லாந்து, ஹொங்கொங், (அண்மைக்கால முதல்) சீனு போன்றவற்றால் இரண்டு சத வீதத்தை மட்டும் வழங்கும் இலங்கை போன்ற நாடுகள் நசுக்கப்படாது காத்தது இந்த ஏற்பாடேயாகும். எவ்வாறெனினும் கோட்டாமுறை ஒரு இரு புடை ஒப்பந்தமாக மட்டுமே இருப்பதனுல் எந்நேரமும் எம்மைத் திணற வைக்கக்கூடும். ஆனுல் இறுப்பு (Tariff) முறை அத்தகையதாகவன்றி, சுதந்திரமான செயற்பாட்டுக்கு வழி வகுக்க வல்லது.

SITHY VINAY...
SARLALAI WEST
CHUNNAKAM

சிறப்புக் கட்டுரை

# நியாய வியாபார ஆணைக்குழு — ஓர் ஆய்வு
# FAIR TRADING COMMISSION – AN APPROACH

C. N. ராதாகிருஷ்ணன், B. Com. (Cey.)
சந்தைப்படுத்தற் பிரிவு,
லங்கா மில்க் பூட்ஸ், (சி. டபிள்யூ. ஈ) லிமிட்

முன்னுரை

வணிகத்துறையில் பாரிய மாற்றங்கள் இத் தசாப்தத்தில் ஏற்படுத்தப்பட்டன. இவற்றுள் நியாய வியாபார ஆணைக்குழு அமைக்கப்பட்டமையும் ஒன்று கும். இக்குழு 1987ம் ஆண்டின் 1ம் இலக்க நியாய விலை ஆணைக்குழுச் சட்டத்தின் வாயிலாகத் தோற்று விக்கப்பட்டது. இச்சட்டம் 1987 ஜனவரி மாதம் 22ம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது. இச் சட்டம் இயற்றப்பட்டதற்கான பின்னணியையும் அதன் முக் கிய அம்சங்களையும் விளக்கி இச்சட்டத்தின் குறை நிறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

பின்னணி

நியாயபூர்வமான வணிகம் (Fair Trading) மேற் கொள்ளப்படும் வகையில் பல சட்டங்கள் காலத் துக்கு காலம் இயற்றப்பட்டு இருந்தன. நியாய வியா பார ஆணைக்குழுச் சட்டம் இயற்றப்பட முன்னரே இச்சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. 1896ம் ஆண்டின் பொருட்கள் விற்பனவு கட்டளைச் சட்டம் (Sale of Goods Ordinance), கம்பனிகள் சட்டம், வியாபாரப் பெயர்கள் சட்டம் (Business Names Act) சீட்டுக் கட்டளைச் சட்டம் (Cheetu Ordinance) நுகர் வோர் பாதுகாப்புச் சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டம் போன் றவை நியாய பூர்வமான வணிகம் இடம் பெறலைக் குறிக்கோளாகக் கொண்டு இயற்றப்பட்ட சட்ட ஆக் கங்களே. இச்சட்டங்கள் வாயிலாகச் சில திணைக்களங் களும் அமைப்புக்களும் தோற்றுவிக்கப்பட்டன. அவற் றுட் சில இன்றும் நம்மிடையே தொழிலாற்றி வரு கின்றன. இதைப்போலவே நியாய வியாபார ஆணைக் குழுச் சட்டத்தின் வாயிலாக நியாய வியாபார ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்டது.

முழுவுரிமைகளையும் (Monopolies) ஒன்றிணைவுகளை யும் (Merger) போட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளையும் (Anti Competitive Practices) கட்டுப்படுத்துவதற் கும், தேசிய விலைக் கொள்கை ஒன்றை வகுத்தமைப் பதற்கும், செயற்படுத்துவதற்கும் என நியாய வியா பார ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதற்கும், 1975ம் ஆண்டின் 42ம் இலக்க தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும் அதனுடன் தொடர்புபட்ட கருமங்களை ஒழுங்கு செய்வதற்கு மாக இச்சட்டம் இயற்றப்பட்டது. எனினும் இச்சட் டம் இயற்றப்பட முன்னரேயே முழுவுரிமையையும், போட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும், விலைக்கொள்கையை தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டமும், கட் டுப்படுத்துவனவாக இயற்றப்பட்டு இருந்தன. இவற்றைவிட உணவு மற்றும் மருந்துகள் சட்டமும் (Food and Drugs Act) அழகு சாதனப் பொருட்கள் மருந்துகள் மற்றும் சாதனங்கள் சட்டமும் (Cosmetics, Drugs & Divices Act) இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டமும் (Sri Lanka Standards Institution Act) நியாய வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டனவாகும்.

இவ்வாறிருக்க இதற்கெனத் தனியான தொரு சட்டத்தை இயற்ற வேண்டி நேர்ந்தது ஏன் என்ற வினு எழுதுவது நியாயமானதே. இதற்கு விடை காணு வதற்கு இச்சட்டத்தின் வாயிலாகத் தோற்றுவிக்கப் பட்ட நியாய விலை ஆணைக்குழுவின் தொழிற்பாடு களையும் அதிகாரங்களையும் மட்டுமின்றி அதன் வரை யறைகளையும் உற்று நோக்குவது அவசியமாகின்றது. இந்தவகையில் ஏனைய நாடுகளில் தோற்றுவிக்கப்பட் டுள்ள இதனை ஒத்த நிறுவனங்களுடன் இக்குழுவை ஒப்பீடு செய்தலும் பொருத்தமானதே.

## அமைப்பும் செயற்பாடும்:

### குறிக்கோள்கள்

சட்டத்தில் ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் குறித்துரைக்கப்படவில்லை. ஆனால் அதன் 6ம் பிரிவு இக்குழுவானது தனது பணிகளை ஆற்றும்போது விஷேட கவனம் செலுத்த வேண்டிய கருமங்களை எனச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது. அவற்றை இக் குழுவின் குறிக்கோள்கள் எனக் கருதலாம்.

அவையாவன:

1. நுகர்வோர் நலன் பேணுதல்.

2. உற்பத்தியாளனுக்குப் போதிய ஊக்குவிப்புக்களை ஏற்பாடு செய்தல்.

3. பொருள் உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடுகட்டு நியாயமான வருமானங்கள் ஈட்டப்படுவதை உறுதி செய்தல்.

4. பல்வேறு பொருளாதாரத் துறைகளிடையே மூல வளங்களைக் குறித்து ஒதுக்குதல்.

5. அரச கூட்டுத்தாபனங்கள் திறம்பட இயங்க வழி வகுத்தல்.

6. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்.

7. அரசாங்கத்தின் ஏனைய பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் எய்தப்படுவதற்கு உதவுதல்.

**தொழிற்பாடுகள்**

சட்டத்தின் 5ம் பிரிவு இக்குழுவின் தொழிற்பாடுகளைப் பின்வருமாறு வரையறை செய்கின்றது:-

1. முழுவுரிமை, ஒன்றிணைவு, அல்லது போட்டிக்கு எதிர்ப்பான நடத்தைகள் பற்றிப் புலனாய்வு செய்து பொருத்தமான கட்டளைகள் வழங்கல்.

2. பொருட் தட்டுப்பாடு அல்லது அதற்கான சாத்தியம், நியாயமற்ற விலை ஏற்றம் அல்லது அதற்கான சாத்தியம் என்பவை காணப்பட்டால் அப் பொருளுக்கு ஆகக்கூடிய தொழிற்சாலை, மொத்த விற்பனவு, அல்லது சில்லறை விற்பனவு விலையினை நிர்ணயித்தல் அல்லாவிடின் பொருளுக்கான உச்சவிலையை நிர்ணயிக்கக்கூடிய விலை அமைப்பு ஒன்றினை நிர்ணயித்தல்.

3. பொருத்தமான முகவர் ஒருவர் பொருட்களின் விலையில் தேவையான மாற்றங்களைச் செய்ய முனையும்போது அது குறித்துப் பரிசீலனை செய்து விலைகளைப்பற்றி அறிக்கை வழங்கல்.

4. அமைச்சர் ஒருவர் விலைபற்றிய ஆலோசனை கோருவாரெனில் அதனைப் பரிசீலனை செய்து அறிக்கை வழங்கல்.

5. வேறொருவரின் வேண்டுகோளின் பேரிலோ அன்றித் தனியாகவோ பொருட்களின் விலைகள் குறித்து அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

அதிகாரங்கள்

மேற்கூறப்பட்ட தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு இக்குழுவுக்கு விரிவான அதிகாரங்களைச் சட்டம் வழங்கியுள்ளது. அவையாவன:

1. பதிவேடுகளைப் பேணி வருமாறும், விபரத்திரட்டுக்களை வழங்குமாறும் பின்வருவோரை வற்புறுத்தலாம்.

   (அ) பொருட்களின் உற்பத்தியாளர்

   (ஆ) அவற்றின் இறக்குமதியாளர்

   (இ) விநியோகஸ்தர்

2. தனக்குத் தேவையான தகவல்களையும் ஆவணங்களையும் எவரிடம் இருந்தும் கோரிப் பெறலாம். இவ்வாறு கோரப்படும்போது பூரண தகவல்களை வழங்குவதற்குக் கோரப்பட்டோர் கடப்பாடுடையவர் ஆவர்.

3. வளவுகட்குட் பிரவேசிப்பதற்கும், பதிவேடுகளைப் பரிசோதிப்பதற்கும் அவற்றைப் பிரதிபண்ணுவதற்கும் தனது அதிகாரிகட்கு அதிகாரம் வழங்கலாம்.

4. அவசியமான விசாரணைகளையும் புலனாய்வுகளையும் மேற்கொள்ளலாம்.

5. (அ) சாட்சியம் அளிப்பதற்கு எல்லோரையும் கட்டளை விட்டு அழைக்கவும்,

   (ஆ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு நிர்ப்பந்திக்கவும்,

   (இ) சாட்சிகளுக்குச் சத்தியப்பிரமாணம் செய்விக்கவும். இக்குழு மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கொண்டது.

6. ஆணைக்குழு அல்லது அதன் உறுப்பினரை அவதூறு செய்தல், குழுவின் செயற்பாடுகளில் தலையிடுதல், ஆணைக்குழு முன் தோற்ற மறுத்தல், கேள்விகட்குப் பதிலளிக்கவும், ஆவணங்களைக் கையளிக்கவும் மறுத்தல் போன்றவை குற்றங்களாகும். இவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்படக்கூடியவை.

ஆணைக்குழு உறுப்பினரும் ஊழியரும் நல்லெண்ணத்துடன் செயற்படும்போது அவர்கட்கு எதிராக எவரும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளைத் தொடர இயலாது.

அதிகாரங்களைப் பற்றிய ஒப்பீடு

பாரிய நிறுவனங்கள் சிறியவற்றை விழுங்கிவிடாதிருப்பதற்குச் சட்டமுறையாக இவற்றுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புகள் துணை புரியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் பாதுகாப்புக்களையும் நோக்கும்போது இக்குழு ஒரு நியாயசபையாக இயங்கக் கூடியதாகவும் மிகவுயர் அதிகாரங்கள் கொண்ட அமைப்பாகவும் தென்படுகின்றது. பிற நாடுகளில் காணப்படும் இதனை ஒத்த அமைப்புக்களுடன் ஒப்பிடும்போது இக்குழுவின் அதிகாரப் பரப்பளவை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

முழு உரிமைகள், ஒன்றிணைவுகள் தொடர்பான ஆணைக்குழுக்கள் இந்தியாவிலும் பிரித்தானியாவிலும் உள்ளன. 1914ன் பின்னர் ஐ. அ. நாடுகளில் சமஷ்டி வியாபாரக்குழு அமைக்கப்பட்டது. பிரித்தானியாவில் நியாய வியாபார இயக்குனர் நாயகத்தால் வேண்டப்படும்போதே முழுவுரிமை பற்றியோ ஒன்றிணைவு பற்றியோ விசாரணை மேற்கொள்ள முடியும். ஆனால் இலங்கையில் சுயமாகவே இக்குழு விசாரணை மேற்கொள்ளும் வலுவைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பிரித்தானியாவில் முழுவுரிமை – ஒன்றிணைத்தல் ஆணைக்குழு, நியாய வியாபார இயக்குனர் நாயகம், போட்டி எதிர்ப்பு நீதிமன்றம் என்ற மூன்று நிறுவனங்களிடையே பகிரப்பட்டுள்ள அதிகாரங்கள் இலங்கையில் நியாய வியாபார ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தேசிய விலைக்கொள்கை அமுலாக்கச் செயற்பாடும் இதன் மேலதிக அதிகாரப் பரப்பாக இலங்கையில் காணப்படுகின்றது.

பிரித்தானிய ஆணைக்குழு தனியார்துறை நிறுவனங்களை மட்டுமன்றி அரசதுறை நிறுவனங்களையும் புலனாயும் அதிகாரம் கொண்டதாகும். ஆனால் இலங்கையில் இந்த அதிகாரம் இக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பது சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும் அரசதுறை நிறுவனங்களையும் புலனாய்வு செய்யும் ஆற்றலை இக்குழுக் கொண்டதே எனவும் சிலர் வாதிடுகின்றனர். இந்த வகையில் மிகப் பாரிய அதிகாரங்களைக் கொண்ட இக்குழு இலங்கையின் வணிக அமைப்பு முறையில் முக்கியமான ஒரு அமைப்பு எனக் கருதப்படல் தவறாகாது.

அமைப்பு

இக்குழு இடையறு வழியுரிமையும், பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாகும். வியாபாரம், வர்த்தகம், சட்டம், கைத்தொழில் என்பவற்றில் பரந்த அனுபவம் கொண்ட எழுவரை இதன் உறுப்பினராகவும் அவர்களில் ஒருவரைக் குழுவின் தவிசாளராகவும் அமைச்சர் நியமிப்பார். இக்குழுவின் முதன்மை நிறைவேற்றுனர் இதன் செயலாளர் நாயகமாகும். இவர் அமைச்சரின் இசைவுடன் குழுவால் நியமிக்கப்படுவார். அதிகாரிகளையும், ஊழியரையும், ஆலோசகர்களையும், குழுவே நியமிக்கும். இக்குழுவின் ஊழியர் அரச ஊழியராகக் கருதப்படுவர்.

நாடாளுமன்றம், மாவட்ட அபிவிருத்தி உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றின் உறுப்பினரும் இலங்கைக் குடிமகன் அல்லாதோரும், சிறைசென்று மீண்டோரும் இதன் உறுப்பினராக முடியாது. காரணம் ஏதும் காட்டாது அமைச்சர் இக்குழுவின் உறுப்பினரையோ தவிசாளரையோ பதவி விலக்கம் செய்யலாம். இதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட இயலாது.

பாராளுமன்றத்தால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படும் தொகைகளையும் தனது செயற்பாட்டின் விளைவாகப் பெற்றுக்கொள்ளும் வருமானங்களையும் நிதியாகக்கொண்டு ஆணைக்குழு செயற்படும்.

## பொருள் கோடல்

முழுவுரிமை நிலை (Monopoly Situation)

பாரம்பரிய பொருளியல் விளக்கத்தின்படி சந்தை விலையிலும் விற்பனவுத் தொகையிலும் ஆதிக்கம் செலுத்தக்கூடியதும் நெருங்கிய பதிலீடற்ற பொருளை உற்பத்தி செய்வதுமான நிறுவனம் ஒன்று மட்டுமே ஒரு தொழிலில் காணப்படுமாயின் அது முழுவுரிமை நிலை ஆகும். எனினும் தன்னை ஒத்த வேறு நிறுவனங்கள் சந்தையுள் பிரவேசிப்பதற்குத் தடை காணப்பட வேண்டியதும் முழுவுரிமை நிலையின் முன் நிபந்தனை ஆகும். அரசாங்கத்திடம் பெற்றுக்கொள்ளும் விசேட அனுமதி தொழில் நுட்ப ஆதிக்கம், சந்தையில் கழுத்தறுப்புப் போட்டிகள் மூலம் ஏனைய நிறுவனங்களை வேரறுத்தல் என்பனவற்றால் முழுவுரிமை நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.

விலைகள் அதிகமாகக் காணப்படல், வெளியீடு குறைந்தளவினதாக அமைந்திருத்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் ஆர்வமின்மை, நுகர்வோர் தெரிவுச் சுதந்திரம் இன்மை என்பவை முழுவுரிமையின் குறைபாடுகளாகும்.

சந்தையில் தூய முழுவுரிமை காணப்படுதல் வெகு அரிதானது. முழுவுரிமைப் போட்டி நிலையோ (Mono-

polostic Competition) சில்லோர் உரிமையோ (Oligo-poly) தான் பொதுவாகக் காணப்படுகின்றது. இப் பொது விதிக்குப் புறம்பாக இலங்கையில் சில தொழில்களில் முழுவுரிமை காணப்படுகின்றது.

சிகரட் உற்பத்தியில் சிலோன் ருபாக்கோ கம்பனி லிட். முழுவுரிமை கொண்ட தனியார் துறை நிறுவனமாகவும், புகையிரதப் போக்குவரவில் இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களம் முழுவுரிமை கொண்ட பொதுத்துறை நிறுவனமாகவும் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 12ஆம் பிரிவு முழுவுரிமை நிலை பற்றிய தனது விளக்கத்தை அளிக்கின்றது. பொருட்கள் சேவைகளின் வழங்கல் தொடர்பாகவும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பாகவும் முழுவுரிமை நிலை எழலாம்.

பொருட்கள் சேவைகளின் வழங்கல் தொடர்பாகப் பின்வரும் சந்தர்ப்பங்களில் முழுவுரிமை நிலை அனுமானிக்கப்படும்:

1. அவற்றின் குறித்த நூற்று வீதம் ஒருவரினுல் அல்லது ஒருவருக்கு மட்டும் வழங்கப்படின்

2. அவற்றின் குறித்த நூற்றுவீதம் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள குழுக்களைக்கொண்ட அதே தொகுதி உறுப்பினர்களால் அல்லது அவர்கட்கு மட்டும் வழங்கப்படின்

3. வழங்குபவரோ கொள்பவரோ பலராக இருக்கும் பட்சத்தில் அவற்றின் தயாரிப்பு, வழங்கல் என்பவற்றில் போட்டியைத் தடுக்கும், மட்டுப்படுத்தும் அல்லது மாறுன வழியில் இட்டுச்செல்லும் நடைமுறைகள் கையாளப்பட்டிருப்பின்

4. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உடன்படிக்கைகளின் விளைவாக அவை இலங்கையில் வழங்கப்படாதிருப்பின்.

ஏற்றுமதி தொடர்பான முழுவுரிமை பின்வரும் சந்தர்ப்பங்களில் எழலாம்.

1. ஒரு பண்டத்தின் குறித்த நூற்று விகிதம் ஒருவரால் அல்லது ஒரு தொகுதி உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்டிருப்பின்

2. பண்டத்தின் குறித்த நூற்று விகித ஏற்றுமதியை அல்லது அது தொடர்பான போட்டியைத் தடுக்க அல்லது மட்டுப்படுத்தக்கூடிய உடன்பாடு காணப்படின்

3. பண்டத்தின் குறித்த நூற்று விகித வழங்கலை அல்லது அது தொடர்பான போட்டியைத் தடுக்க அல்லது மட்டுப்படுத்தக்கூடிய உடன்பாடு காணப்படின்

மேற்போந்த பகுதியில் அடிக்கடி குறிப்பிட்ட ''நூற்று விகிதம்'' என்பது எவ்வளவாக இருக்க வேண்டும் என்பது $33\frac{1}{3}\%$க்கு குறையாத வகையில் இச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்கு விகிதங்களினுல் நிர்ணயிக்கப்படும்.

குறித்த நூற்றுவிகிதத்தின் மேல்கொள்ளல் அல்லது வழங்கல் காணப்படுமாயின் அது சட்டமுறையான முழுவுரிமையாகக் (Statutory Monopoly) கருதப்படும். பிரித்தானியாவில் 1948 முதல் $\frac{1}{3}$க்கு குறையாத சட்ட முறையான முழுவுரிமை என்ற அம்சம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1973ன் நியாய வியாபாரச் சட்டம் இவ்விகிதத்தை 25%மாக மாற்றியமைத்தது.

இச்சட்டத்தில் முழுவுரிமை நிலையானது பொருட்களை வழங்கும்போது மட்டுமன்றிக் கொள்ளும்போதும் ஏற்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை அவதானித்தல் வேண்டும்.

**ஒன்றிணைவு நிலைமை (Merger Situation)**

நிறுவனங்கள் வேறு நிறுவனங்களைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும் செயன் முறையே ஒன்றிணைவு ஆகும். இந்த வகையில் ஒன்றிணைவு, நிறுவனங்களின் புறவளர்ச்சி (External Growth) யுடன் தொடர்பானதாகும். தொழில் ஐக்கியங்கள் (Amalgamations) எனவும் இது அழைக்கப்படுகின்றது. தொழில்களின் உரிமையாளர் அல்லது இயக்குனர் தமக்குள் யோசித்துத் தீர்மானிப்பதன் வாயிலாக இணைப்பு ஏற்படுத்தப்படுகின்றது. குறித்த ஒரு நிறுவனம் வேறொன்றைத் தன்னுடன் இணைத்துள்ளது என்பதன் வெளிப்பாடாக அமைவது முன்னையது பின்னையதன் 50%க்கு மேற்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்வதே ஆகும்.

உரிமையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அதனையும் கருத்திற்கொண்டே ஒன்றிணைவு ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படல் வேண்டும். சில சமயங்களில் சொத்து அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவன உரிமையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதில்லை. நிறுவனப் புனர் நிர்மாணமாக (Reconstruction) இச்செற்பாடு அமையும். இதனை ஒன்றிணைவாகக் கொள்ளலாகாது. உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தல், சந்தையில் ஆதிக்கத்தை அதிகரித்தல், திரவநிலையை மேம்படுத்தல், இலாபவாய்ப்பை பெருக்குதல் போன்ற

பல்வேறு காரணங்கட்காக நிறுவனங்கள் ஒன்றிணை கின்றன.

நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 13ம் பிரிவு பின்வரும் நிலைகளை ஒன்றிணைவு நிலைகளாகக் கருதுகின்றது:-

1. பொருட்கள் அல்லது சேவைகளின் சந்தையில் ஆதிக்கத்தை நிலைநிறுத்தக் கூடியவாறோ அல்லது அச்சந்தையைக் கட்டுப்படுத்தத் தக்கவாறோ தனது நிலையை மாற்றியமைத்துக் கொள்வதற்காக வேறொருவரின் அல்லது நிறுவனத்தின் பங்குகளை அல்லது சொத்துக்களை கொள்வனவு செய்தல்.

2. பொருட்கள் அல்லது சேவைகள் சந்தையில் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்திவரும் ஒருவர் தனக்குப் போட்டியாகக் காணப்படும் நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் தனது ஆதிக்க நிலையை மேலும் வலுப்படுத்துதல்.

சுருங்கக்கூறின் சந்தையில் ஆதிக்கம் செலுத்துவதற்கு அல்லது தனக்குள்ள ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு வேறு ஒருவரின் அல்லது நிறுவனத்தின் பங்குகள் அல்லது ஆதனங்களைக் கொள்வனவு செய்தல் ஒன்றிணைவு நிலை ஆகும். இச்செயற்பாட்டைத் தனி ஒருவர் செய்தாலும் ஒரு குழுவினர் செய்தாலும் அது ஒன்றிணைவு நிலையாகவே கருதப்படும்.

முழுவுரிமையிற் போல இங்கும் பொருட்களை வழங்குபவர் மட்டுமன்றிக் கொள்வனவு செய்பவரும் ஒருவருடன் ஒருவர் இணைவதும் ஒருவருடன் மற்றவர் இணைவதும் ஒன்றிணைவாகவே கருதப்படுகின்றது. ஒன்றிணைவின் பெறுபேருகத் தனியுரிமைப் போட்டி நிலை ஏற்படுகின்றது.

**போட்டி எதிர்ப்பு வழக்காறு**
**(Anti Competitive Practice)**

போட்டித் தடையைச் சட்டமுறையற்றன வாக்கிய கட்டங்கள் முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலேயே உருவாக்கப்பட்டன. பின்னர் பல்வேறு நாடுகளும் அதனை ஒட்டிய சட்டங்களை இயற்றின. இந்தவகையில் பிரித்தானியச்சட்டம் போட்டி எதிர் வழக்காறுகட்குக் கொடுத்துள்ள வரைவிலக்கணத்துக்கு ஏற்பவே இலங்கைச் சட்டமும் இதனை வரையறுத்துள்ளது.

நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 14ம் பிரிவு போட்டி எதிர்ப்பு வழக்காற்றைப் பின்வருமாறு வரையறுக்கின்றது.

ஒருவர் தனது தொழிற்போக்கின்போது தனது நடத்தைமூலம் அல்லது அவருடன் இணைந்தோரின் நடத்தைப் போக்குடன் சேர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும்போதோ இலங்கையில் பண்டங்களின் தயாரிப்பு, வழங்கல் அல்லது கொள்ளல் அல்லது சேவைகளை வழங்கல் அல்லது பெற்றுக்கொள்ளல் தொடர்பாகப் போட்டியை மட்டுப்படுத்துகின்ற, மாறுன வழியில் இட்டுச் செல்கின்ற அல்லது தடுக்கின்ற பயனைக் கொண்டிருப்பின் அது போட்டி எதிர்ப்பு வழக்காறு ஆகும்.

சட்டத்தில் எந்நடவடிக்கை போட்டி எதிர்ப்பு நடவடிக்கையாக அமையுமென்பது குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வரையறுப்பது சாதுரியமானதுமல்ல. எனவே குறித்த ஒரு நடவடிக்கை போட்டி எதிர்ப்பு வழக்காகக் கொள்ளப்படலாமா என ஆணைக்குழு சந்தர்ப்பத்தை ஒட்டித் தனித்தனியாகத் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

சந்தையின் நிலைமை, சந்தையில் அந்நிறுவனம் கொண்டுள்ள பங்கு அல்லது சக்தி, நிறுவனத்தின் உற்பத்திப் பொருளுக்குப் பொருத்தமான சந்தை (relevant market) என்பவற்றைப் பொறுத்து, சந்தையில் போட்டி எதிர்ப்பு வழக்காறுகள் காணப்படலாம். குறித்த பொருளுக்கு முற்றிலும் பொருத்தமான சந்தையில் இருந்து மட்டுமன்றி அதனுடன் ஓரளவு மட்டுமே தொடர்பு கொண்ட சந்தையிலிருந்தும் எது விதத்திலும் தொடர்பற்ற சந்தையில் இருந்தும்கூட போட்டி எதிர்ப்பு வழக்காறுகள் தோன்றலாம். நிறுவனம் போட்டி எதிர்ப்பு நோக்கம் கொண்டிருந்தால் மட்டுமே அதன் செயற்பாட்டில் இருந்து போட்டி எதிர்ப்பு வழக்காறு எழ முடியும்.

ஏற்கனவே விளக்கியுள்ளதைப்போல சட்டத்தில் போட்டித் தடை நடவடிக்கைகள் எவை என விபரிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய விலையிடல் ஆணைக்குழுவின் முன்னைநாள் செயலாளர் நாயகம் திரு. H. H. D. சில்வா அவர்கள் தனது அண்மைய ஆய்வுக்கட்டுரை ஒன்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழக்கூடிய போட்டி எதிர்ப்பு வழக்காறுகளைப் பட்டியலிட்டுள்ளார். அவையாவன:

**விலையிடற் கொள்கை (Pricing Policy)**

(அ) விலைபேதப்படுத்தல் (Price discrimination)

ஒரே பொருளை வெவ்வேறு சந்தைகளில் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யும் செயற்பாடே விலைபேதப்படுத்தலாகும். இவ்வாறு வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதற்குப் பொருளின் கிரயத்தில் (Cost) உள்ள வேறுபாடு காரணமாக அமைவ

தில்லை. வேறுபட்ட சந்தைத் துண்டங்களுக்கு (Segments) வேறுபட்ட விலைகளில் பொருட்களை வழங்குவதன் மூலமும், வியாபாரக் கழிவுகள், தள்ளுபடிகள் என்பவற்றை வழங்குவதன் மூலமும் விலை வேறுக்கம் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) முற் குறைத்து விலையிடல்
(Predatory Pricing)

போட்டிப் பொருளைச் சந்தையில் இருந்து அகற்றும் நோக்குடன் குறைந்த விலையில் தற்காலிகமாக விற்பனவு செய்துவிட்டு சந்தையைக் கைப்பற்றிய பின்னர் விலையை அதிகரிக்கும் செயற்பாடு இது வாகும்.

(இ) நிலைக்குத்தான விலைப்பிழிவு
(Vertical price Squeezing)

நிறுவனங்கள் நிலைக்குத்தாக இணைத்துள்ள போது உள்ளீடுகளைப் போட்டியாளருக்கு உயர் விலைகளில் வழங்கி முடிவுப் பொருட்களை விலை குறைத்து விற்பதன்மூலம் போட்டியாளரின் இலாபத்தைப் பிழிதல்.

(ஈ) இடையான விலைச் சேர்வை
(Horizontal price collaboration)

உற்பத்தியாளர் தம்மிடையே இணங்கி வெளியீட்டு அளவைக் குறைப்பதன்மூலம் பொருளின் விலையை அதிகரிக்கக்கூடிய நிலையும் விநியோகஸ்தரிடையே காணப்படும் மன ஒருமைப்பாட்டின் காரணமாகக் குறைந்த விலையிலேயே பொருட்களை உற்பத்தியாளரிடம் இருந்து பெறக்கூடிய நிலையும் இப்பதத்தால் விளக்கப்படுகின்றது.

பங்கீட்டுக்கொள்கை (Distribution Policy)

2. (அ) பிணிக்கப்பட்ட விற்பனை—(Tie-in-Sales)

பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்வது எனில் வேறொரு பொருளையும் அதனுடன் சேர்த்துக் கொள்வனவு செய்ய வேண்டுமென நிர்ப்பந்தித்தல்.

உ+ம்: ரயர் வாங்குபவர் ரியூப் கொள்வனவு செய்யுமாறு நிர்ப்பந்தித்தல்

(ஆ) முழுமையான வன்முறை (Full Line Forcing)

ஒரு தொகுதி பொருட்களில் ஒன்றினைப் பெறுவதானல் தொகுதியில் உள்ள அனைத்துப் பொருட்களையும் பெறுமாறு நிர்ப்பந்தித்தல்.

உ+ம்: ஒரு நிறமுள்ள பென்சிலைக் கொள்வனவு செய்ய விரும்புபவரை அந்தத் தொகுதியைச் சேர்ந்த ஆறு அல்லது பன்னிரண்டு நிறங் கொண்ட பென்சில்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமென நிர்ப்பந்தித்தல்.

(இ) தனிப்பட்ட வழங்கல் (Exclusive Supply)

குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட விநியோகஸ்தருக்கு மட்டுமே வழங்குவதன் மூலம் போட்டியை அங்கு வரையறுத்தல்.

(ஈ) பிரத்தியேகக் கொள்வனவு (Exclusive Purchase)

குறிப்பிட்ட தயாரிப்பாளரது பொருட்களை மட்டும் விற்பனை செய்வதென அவருடன் ஒப்பந்தம் செய்தல்.

3. தெரிந்தெடுக்கப்பட்ட பங்கீடு (Selective Distribution)

தகுதி விதிகளின்படி விற்பனை நிலையங்களைத் தெரிந்தெடுத்து அவற்றுக்கு மட்டும் பொருட்களை விற்பனைக்கென வழங்கல்.

4. ஏனையவை

(அ) மறைச் சூழ்ச்சியான கேள்வி விற்பனை
(Collusive Tendering)

தயாரிப்பாளர் சிலர் தம்மிடையே இணக்கம் காணுவதன் மூலம் கேள்வி விற்பனையில் பங்கு கொள்ளாது விடுதல் அல்லது அவர்களில் ஒருவரே உயர் விலை/ குறைவிலையிட இடமளித்தல் மூலம் தமது குழுவிலுள்ள ஒருவருக்குக் கேள்வி விற்பனை கிடைக்கும்படி செய்தல்.

(ஆ) தெரிந்தெடுக்கப்பட்ட விற்பனையும் ஈடுபட மறுத்தலும் (Selective Sales & Refusal to Deal)

பொருட்களை உற்பத்தி செய்வோர் தமது மீள் விற்பனையாளரைத் தெரிந்து எடுப்பதையும் சில பங்கீட்டாளர் அல்லது வியாபாரிகளுடன் வியாபாரம் செய்ய மறுப்பதையும் இது குறிக்கும், ஆனல் கடன் செலுத்த முடியாமை, பொருத்தமான விற்பனை நிலையம் கொண்டிராமை போன்ற தகைமையீனங்கட்காக தெரிந்தெடுக்கப்படாமை இப்பதத்தால் குறிக்கப்படுவதில்லை.

(இ) சந்தை மற்றும் வாடிக்கையாளர் ஒதுக்கீடு
(Market & Customer Allocation)

பிரதேசரீதியாக அல்லது ஒதுக்கீட்டு அடிப்படையில் வாடிக்கையாளருக்குப் பொருட்களை வழங்குவதைச் சந்தை ஒதுக்கம் என்பர். மீள் விற்பனையாளர்

EARLALAI WEST
CHUNNAKAM

குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு மட்டும் விற்பனை செய்ய அனுமதிக்கப்படல் வாடிக்கையாளர் ஒதுக்கீடு ஆகும். இவை போட்டியைத் தடுக்கும் வழக்காறுகளாகும்.

(ஈ) ஒப்பந்த நிபந்தனைகள்

போட்டி இன்மை விதிகளை விற்பனை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளலும் விலைகளின் உருவாக்கத்தை முறையற்ற விதத்தில் பாதிக்கச் செய்யும் விதத்தில் ஒப்பந்த விதிகளை ஆக்குதலும்.

மேற்கூறிய நடத்தைகள், வியாபாரத்தடை நடத்தைகள் அல்லது நியாயமற்ற வியாபார நடத்தைகள் எனவும் அழைப்பர்.

**போட்டிச் சூழ்நிலை நன்மைதருமா?**

முழுவுரிமை என்ற சந்தை அமைப்பு ஒன்று காணப்படுமாயின் அங்கு போட்டி எள்ளளவும் காணப்படமாட்டாது. இச்சந்தையமைப்பு பொதுவாக விரும்பப்படுவதில்லை. ஏனெனில் இச்சந்தை நுகர்வோர் நலனைப்பற்றி அக்கறைகொள்ள வேண்டிய அவசியமே இல்லை. பொருட் குவிப்பு (Dumping), குறைந்த வெளியீட்டு மட்டம், நீண்டகாலத்துக்கு உயர் இலாபங்களை ஈட்டக்கூடிய ஆற்றல், வருமானப் பங்கீட்டில் சமனற்ற நிலை, புதிய கண்டுபிடிப்புக்களும் உற்பத்தி முறைகளும் ஏற்படுத்தப்படாமையால் கிரயம் (Cost) உயர்வாகக் காணப்படல், நுகர்வோர் தெரிவுச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் போன்ற தீய விளைவுகள் முழுவுரிமைச் சந்தை நிலையில் காணப்படுகின்றன.

ஆனல் பொருளியலாளர் இத்தகு சந்தை நிலையை முற்ருக வெறுப்பதும் இல்லை. இச்சந்தையில் உள்ள நிறுவனம் விலை பேதப்படுத்தல் மூலம் ஒரேபொருளை குறைந்த விலையில் குறைந்த வருமான மட்டத்தவருக்கும் அளிக்கக் கூடியதாகவுள்ளது.

உ+ம் வைத்தியரின் சேவை. அத்துடன் புகையிரதப் போக்கு வரவு போன்ற தொழில்களில் முழுவுரிமை பயனுள்ளதாகக் காணப்பட்டுள்ளது. துறைமுகத் தொழில், எரிபொருள் சுத்திகரிப்பும் விநியோகமும் போன்றவற்றில் பாதுகாப்புக் காரணங்கட்காக அரச முழுவுரிமை விரும்பப்படுகின்றது. இத்தகு பிரத்தியேக சூழ்நிலை தவிர பொதுவாக முழுவுரிமை நிலை வரவேற்கப்படுவதில்லை.

ஒன்றிணைவு நிலை சந்தை ஆதிக்கத்தை ஏற்படுத்துவதைக் குறியாகக் கொண்டதாகும். அதே நேரத்தில் ஒன்றிணைவின் விளைவாக நிறுவனங்கள் வளர்ச்சியடையவும் ஏதுவாகின்றது. இந்நிலையில் ஒன்றிணைவுகளின் மூலம் பாரிய நிறுவனங்கள் தோற்றம் பெற்ருல் அவற்ருல் பேரளவுச் சிக்கனங்கள் போன்ற நன்மைகள் ஏற்படவும் கூடும். ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக்கு பாரிய முதலீடும் இத்தகைய நிறுவனங்களால் சாத்தியமாகும். இந்த வாதம் எந்தளவுக்கு சரியானதென்பதை ஆராய்வோம்.

நிறுவனங்கள் ஒன்றிணைவதன் மூலம் அளவுத்திட்டச் சிக்கனங்கள் ஏற்படுவது உண்மைதான். ஆனல் பொறித் தொகுதிகள் சொத்துக்கள் என்பவற்றில் தான் இத்தகைய சிக்கனங்கள் ஈட்டப்படுகின்றன. இதனுல் ஏற்படும் ல்விளைவுகளை ஒன்றிணைவுகளின் வேறொரு விளைவான கைத்தொழில் முகாமைச் சிக்கனமின்மைகள் (Industrial Managerial Diseconomies) இல்லாதொழித்துவிடும் எனக் கண்டுள்ளனர். புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில் நுட்ப அபிவிருத்திகள் என்பவை நிறுவனத்தின் அளவில் தங்கியிருப்பதில்லை எனவும் கூறப்படுகின்றது. மாருக அவை நிறுவனத்தின் கட்டமைப்பில் தான் அதிகளவுக்குத் தங்கியுள்ளன. அத்துடன் போட்டி நிலை காணப்பட்டால் தான் செலவைக் குறைப்பதற்கும் திறமையை வளர்ப்பதற்கும் என புதிய தொழினுட்ப உதவிகள்பால் அதிக நாட்டம் செலுத்தப்படும். நிறுவனத்தின் அளவு அதன் இலாப வாய்ப்புடன் நேரடித் தொடர்பு கொண்டதல்ல எனவும்தற்போது நிறுவப்பட்டுள்ளது. மாருக பெரிய நிறுவனங்களின் மேந்தலைச் செலவுகள் (Overheads) அதிகமானவையாக அமைகின்றன. ஒழுங்கமைப்புச் செயற்திறன் இன்மை (Organisational Inefficiencies) முகாமைத்துவ அளவுத்திட்டச் சிக்கனம் இன்மை (Managerial Diseconomies of Scale) என்பவற்ருல் மேந்தலைச் செலவுகள் அதிகரிக்கின்றன. இந்த வகையில் நோக்கும்போது ஒன்றிணைவுகள் மூலம் தொழில்கள் செறிவடைந்து வளர்வதற்கும் பாரம்பரியமாக முன்வைக்கப்படும் வாதங்களான அளவுத்திட்டச் சிக்கனங்கள், தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவை திருப்திகரமற்றவையாகவே அமைகின்றன.

நிறுவனங்கள் செறிவுற்று தனியுரிமை நிலைகள் வளர்வதற்கு ஒன்றிணைவுகள் வழிவகுக்கின்றன. பல்வேறு காரணங்களுக்காக ஒன்றிணைவுகள் மேற்கொள்ளப்பட்டபோதும் சந்தை வலுவை அதிகரிப்பதற்காகவே பெரும்பாலும் இவை மேற்கொள்ளப்படுகின்றன என பிரித்தானிய மற்றும் அமெரிக்க அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன.

அடம் சிமித் விபரித்த நிறை போட்டிநிலை இன்று எங்கும் காணப்படுவதில்லை. ஆனல் தனியுரிமைப் போட்டிச் சந்தைமுறை காணப்படுகின்றது. தனியுரிமைப் போட்டி, தனியுரிமையைவிட வேறுபட்டது.

சக்திவாய்ந்த சில நிறுவனங்கள் ஏனையவற்றை ஒடுக்கித் தமது விற்பனையைச் சந்தையில் அதிகரிக்கும் நிலையைத் தனியுரிமைப் போட்டி எனலாம். இங்கு மிகப் பாரிய நிறுவனங்கள் ஒன்றுடனொன்று போட்டியிடுகின்றன. ஆராய்ச்சிகளையும் அவற்றின் வழி அபிவிருத்திகளையும் மேற்கொள்ளுகின்றன. ஆனல் அவற்றின் நோக்கம் தம்முடன் போட்டியிடும் ஏனைய நிறுவனங்களைச் சந்தையில் இருந்து அப்புறப்படுத்துவதாகவே அமையும். இவ்வாறு ஒவ்வொரு நிறுவனமும் முயல்வதனுல் தேவைக்கு அதிகமான ஆராய்ச்சியும் மிகை முதலீடும் ஏற்பட்டு சந்தையில் இயல் அளவுக்கு மேற்பட்ட வெளியீடு நடைபெறும். இந்நிலையில் தமது பொருட்களை எவ்வாறேனும் விற்பனை செய்யவேண்டிய நிலை அவற்றுக்கு ஏற்படுகின்றன. ஆனல் நுகர்வோருக்காக விலைகளைக் குறைக்க அவை முன்வருவதில்லை. தமது பொருட்களின் தரத்தை உயர்த்துவதும் இல்லை. மாறுகத் தீவிர பிரச்சார உத்தியை அவர்கள் மேற்கொள்ளுகின்றனர். அத்துடன் ஏனைய சந்தைப்படுத்தல் நுட்பங்களையும் கையாளுகின்றனர். இரகசியமாக சில உடன்பாடுகளைச் செய்யவும் பொருட்களின் தரத்தினைக் குறைக்கவும் இவை பின்நிற்பதில்லை. இதனுல் பொருட்களை மீண்டும் மீண்டும் கொள்வனவு செய்யவேண்டியநிலை நுகர்வோருக்கு ஏற்படுகின்றது. இவ்வழி அதே பொருளுக்கு மேலதிக சந்தை ஒன்று உருவாக்கப்படுகின்றது. இதனுல் மூலவளங்கள் வீணடிக்கப்படுவதற்குக் முழுவுரிமைப் போட்டி வழிவகுக்கின்றது.

மேற்கூறிய வாதங்கள் ஒன்றிணைவுகளும், முழுவுரிமை நிலையும், முழுவுரிவைப் போட்டி நிலையும், சந்தை ஆதிக்கத்தையும், சிக்கனமின்மையையுமே ஏற்படுத்துவனவென்றும் பொருளாதார நலன்களைப் பெறுவதற்கு அவை உதவமாட்டா என்றும் நிறுவுகின்றன.

மறுபுறத்தில் போட்டிச் சூழலால் சமூகத்துக்குப் பல்வேறு நலன்கள் கிட்டுகின்றன. அவையாவன:

(அ) பாரிய அளவு உற்பத்திக்கான வாய்ப்பு

(ஆ) பரந்த அளவிலான நுகர்வோரின் தெரிவுச் சுதந்திரம்.

(இ) பொருட்கள் சேவைகளின் சந்தை விலைகள் தொடர்பான தகவல்கள் சிறப்பாக வெளிப்படுத்தப்படல்

(ஈ) புதிய பொருட்கள், செயற்பாடுகள், தொழினுட்பம் என்பவை அறிமுகப்படுத்தப்பட வாய்ப்புக்கள்

வேறு வார்த்தைகளில் கூறினுல் முழுவுரிமையின் பிரதிகூலங்கள் போட்டி நிலையின் அனுகூலங்களாக அமைகின்றன. எனினும் முழுவுரிமைக்கு எதிராக முன்வைக்கப்படும் வாதங்கள் அனைத்தும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியானவையல்ல என அமெரிக்க அனுபவம் உணர்த்துகின்றது. முழுவுரிமைத் தன்மை கொண்ட சில நிறுவனங்கள் தமது செயற்திறனுலும் விலைகளைக் குறைந்த மட்டத்தில் பேணுவதினுலும் விளம்பர உத்திகளினுலும் வளர்ச்சி அடைந்து காணப்படுகின்றன. இவ்வாறு இவை வளர்ச்சிபெற்று இருப்பது குற்றச்செயல் எனக் கருதப்படலாமா என்ற கேள்வி பிறக்கின்றது. சட்டமுறையாக இவை குற்றச் செயல்கள் எனவே நீதிமன்றங்கள் கருதுகின்றன. சந்தை பரந்ததாக இருந்தால் மட்டுமே சிறந்த போட்டி நிலவமுடியும். பாரிய முழுவுரிமை நிலைக்கும் போட்டி நிறுவனங்கள் பல காணப்படும் நிலைக்கு மிடையே தெரிவுசெய்வது என்பதாக அல்லாமல் பாரிய கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் சமூக பொருளாதாரப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதே எதிர்காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை என போல். ஏ. சாமுவேல்சன் என்ற பொருளியல் அறிஞர் கூறியுள்ளார்.

போட்டி நிலையை விரும்புவது நவீன பாணியாக உள்ளது. எனினும் பொது நலனைப் பாதிக்காத அளவுக்கு முழுவுரிமைகள், ஒன்றிணைவுகள் ஆகியவை அனுமதிக்கப்படல் வேண்டும் என்ற விருப்பும் காணப்படுகின்றது. செயற்படுத்தக்கூடிய போட்டி (workable competition) என்பதே உகந்தநிலை என ருெபர்ட் எச். நெல்சன் என்னும் அறிஞர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நியாய வியாபார ஆணைக் குழுச் சட்டம் நியாய விலை, உயர்தரம், புதிய தொழினுட்பப் பயன்பாடு, கிரயக்குறைப்பு, என்பவற்றை உள்ளடக்கிய வினைதிறனைப் போட்டியினூடாக மேம்படுத்துவதையும், வேலைவாய்ப்புக்களைப் பெருக்குதல், கைத்தொழில் நடவடிக்கைகளின் பங்கீட்டுச் சமநிலையைப் பராமரித்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தை இன்றைய அரசின் தனியார் மயமாக்கற் கோட்பாட்டின் ஒருபடியாகக் கருதலாம்.

**ஆணைக்குழு ஆக்கக்கூடிய ஆணைகள்**

முழுவுரிமை, ஒன்றிணைவு, போட்டிக்கு எதிரான வழக்காறுகள் என்பவற்றைப்பற்றி இந்த ஆணைக்குழு புலனுய்வுகளையும் விசாரணைகளையும் மேற் கொண்டு அத்தகைய நடத்தை பொது நலனுக்குக் குந்தகமானதல்ல எனக் கண்டால் அவை தொடர்ந்தும் மேற்

கொள்ளப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கலாம். ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது போல முழுவுரிமைகள், ஒன்றிணைவுகள், என்பவற்றுட் சில தேசிய நலன் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காவும் வெளிநாட்டுச் சந்தைகளைப் பாதுகாப்பதற்காகவும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையாகும். இவற்றை விட வேறுபட்ட முழுவுரிமைகள், ஒன்றிணைவுகளைக் குழு நிராகரிக்கலாம்.

சட்ட முறையாக ஆணைக்குழு பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கும் வலுவினைக் கொண்டதாகும்.

1. பொறுப்பு முயற்சியின் சொத்துக்களின் ஒரு பகுதியினை விற்பனவு செய்தல் அல்லது மாற்றம் செய்வதன் மூலம் தொழில் எதனையும் பிரித்தல்.
2. தனது ஆணைகள் செயற்படுத்தப்படுவதை மேற்பார்வையிட ஒருவரை நியமித்தல்.
3. போட்டி எதிர்ப்பு வழக்காற்றை முடிவுறுத்தல்.
4. முழுவுரிமை, ஒன்றிணைவு நிலைமை, போட்டி எதிர்ப்பு வழக்காறு எதனதும் பாதகமான தாக்கங்களைப் பரிகரிக்கும் அல்லது தடுக்கும் நோக்கம் கொண்ட வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஆணைக்குழுவால் ஆக்கப்படும் ஆணைகளால் இன்னலுறக் கூடிய எவரும் 30 நாட்களுக்கிடையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

**விலைக் கொள்கை உருவாக்கமும் செயற்படுத்தலும்**

நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் 1975ம் ஆண்டின் 42ம் இலக்க தேசிய விலைகள் ஆணைக்குழுவினை இல்லா தொழிக்கின்றது. தேசியவிலைக் கொள்கையை உருவாக்குதல், அதனைச் செயற்படுத்தல் ஆகிய பணிகள் இக்குழுவிடம் ஒப்படைக்கப்படுகின்றன. தேசிய விலைகள் ஆணைக்குழு பூரணமாக நிறைவேற்றி இராத அம்சங்களும் இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விலைக் கட்டுப்பாட்டாளரின் வேண்டுகோளின்படி உச்சவிலை மட்டத்தையும் விலைகளின் கட்டமைப்பையும் நிர்ணயித்தல். விலைகளில் ஏற்படவுள்ள மாற்றங்களைப் பரிசீலித்தல், யாரொருவரின் பிரதிநிதித்துவத்துக்கு இணங்க அல்லது சுயமாக விலைகள் குறித்துப் பரிசீலித்து அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் என்பவை இக்குழுவின் தொழிற்பாடுகளாகும்.

பொருளின் உச்சவிலையை நிர்ணயிக்கவும் அதற்கு மேற்பட்ட விலையில் அது விற்கப்படலாகாது என விதிக்கவும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. ஆனல் ஆணைக்குழு ஆக்கும் பணிப்பை நீக்கும் அதிகாரம் அமைச்சருக்குண்டு.

**ஆணைக்குழுவின் செயல்வலிமை**

விசாரணை, புலனய்வுகள் என்பவற்றை மேற்கொள்ளும்போது இக்குழுவுக்கு மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரங்களைச் சட்டம் வழங்கியுள்ளது. அதைப் போலவே மேல்நீதிமன்றத்தினூடாக இக்குழுவின் அதிகாரங்களைச் சட்டம் பாதுகாக்கிறது. இத்தகைய விரிவான ஏற்பாடுகளை இச்சட்டம் கொண்டிருந்த போதிலும் குழுவானது தனது செயற்பாடுகளைப் பூரண சுதந்திரத்துடன் ஆற்ற இயலாத வகையில் சில வரையறைகளையும் இச்சட்டம் கொண்டுள்ளது.

அமைச்சராலேயே ஆணைக்குழு உறுப்பினர் நியமிக்கப்படுவர். அத்துடன் காரணம் எதனையும் காட்டாது உறுப்பினர் எவரையும் அமைச்சர் பதவி விலக்கலாம். இத்தகைய ஏற்பாடுகள் இக்குழுவின் உறுப்பினரது சுதந்திர செயற்பாடுகட்கு வரையறை விதிப்பனவாக உள்ளன.

மேலும், ஆணைக்குழு கூட்டத்தைக் கூட்டும்முறை, அதை நடாத்தும்முறை போன்றவற்றில் அறிவுறுத்தல்கள் வழங்கும் அதிகாரமும் அமைச்சருக்கு உண்டு. அத்துடன் விலை நிர்ணயம் தொடர்பாக ஆணைக்குழு ஆக்கும் கட்டளைகளை மாற்றவோ நீக்கவோ அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.

இவற்றைவிட மூன்றிலொரு பங்குக்குக் கீழ்ப்பட்ட சந்தை ஆதிக்கத்தை முழுவுரிமையாகக் குழு நிர்ணயிக்க முடியாதென்றும் கூட்டத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வரையறைகளால் அமைச்சரின் ஊடாக அரசாங்கம் இக்குழுவின் செயற்பாடுகளும் தலையிட முடிவதனுல் அது வரையறைகட்கு உட்பட்ட விதத்திலேயே சுதந்திரமாக இயங்கக்கூடியதாக இருக்கின்றது.

**முடிவுரை**

நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் புறத்தேயும் நீண்ட நாட்களாக இடம்பெற்று வருகின்றன.

போட்டிப் பொருளாதார முறையை ஏற்படுத்துவதன் மூலம் நியாயமான விலையில் நுகர்வோருக்குப் பண்டங்கள், சேவைகள் என்பவற்றைப் பெற்றுத்தரு

வதை இச் சட்டம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எனினும் பாரிய நிறுவனங்கள் ஆணைக்குழுவின் பிடியில் இருந்து எவ்வாறேனும் தப்பி விடக்கூடும் எனவும் உள்ளூர் சிறிய நிறுவனங்கள் பாரிய பல்தேசிய நிறுவனங்களுடன் எவ்விதத்திலும் போட்டியிட முடியாதிருப்பதினால் இச்சட்டத்தால் உண்மையான பலன் எதுவும் ஏற்படப்போவதில்லை எனவும் வாதிடப்படுகின்றது. அத்துடன் இவ்வாணைக்குழு இறுப்புக் கட்டமைப்புக்குழு (Tariff Commission) வுடன் இணைந்தே விலைக் கொள்கை தொடர்பான முடிவுகளை எடுக்க முடியும்.

இக்குழு மிக அண்மையில் ஏற்படுத்தப்பட்டதாகும். இக்குறைந்த காலப்பகுதியில் இதன் செயற்பாட்டைக் கொண்டு இதனைத் திறனாய்வு செய்வது பயன்தரத் தக்கதல்ல.

எனினும் இக்குழுவால் சில நன்மைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. இக்குழு அமைக்கப்பட முன்னர் குறிப்பிட்ட சில தொழில்களை மேற்கொண்டவர்கள் அந்தரங்கமான பொறிமுறைகளைக் கையாண்டு (Secret Devices) உச்ச இலாபம் பெறும் வகையில் விற்பனைகளை மேற்கொண்டிருந்தனர். விலைகளை நிர்ணயிக்கும் விடயத்திலும் அவர்கள் தன்னிச்சையாகவே செயற்பட முடிந்தது. ஆனால் அலுவல் (Official) வழிகளால் அவர்களை விசாரணைகட்கு உட்படுத்த முடியவில்லை. அவர்களது முழுவுரிமை நிலையை அலுவல்சாரா (Unofficial) முறையிலேயே நீக்க முடிந்தது. ஆனால் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டபின்னர் சட்ட முறையாக இத்தகு நிலைகளைக் கையாளக்கூடியதாக இருக்கின்றது.

முழுவுரிமை நீக்கப்படுமாயின் போட்டிச்சூழல் ஏற்பட ஏதுவாகும். இத்தகைய முறையில் சமூக பொருளாதார நலன்களை மேம்படுத்தும் நோக்குடன் இக்குழு உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்படத்தக்கதாகும்.

பிணக்குகளை நீதிமன்றங்கள் ஊடாகத் தீர்ப்பதெனில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. வியாபாரப் பிரச்சனைகளை நீதிமன்றத்துக்குப் புறம்பாகவே இக்குழு தீர்மானிக்கக் கூடியதாக இருப்பது சுணக்கங்களை நீக்குவதற்கு உதவும்.

கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இக்குழு அமைக்கப்பட்டிருப்பதால் நெகிழ்வுத் தன்மை கொண்டதாகவும் விரைவாக பிரச்சனைகளைக் கையாளக்கூடியதாகவும் இருக்கின்றது. எனினும் அமைச்சருக்குச் சட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள பரந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்படுமெனில் அரச திணைக்களங்களில் பொதுவாகக் காணப்படும் திறமையின்மை, சுணக்கம், ஊழல், பக்கம் சார்தல் ஆகிய குறைபாடுகள் இக்குழுவையும் பீடிக்கக்கூடும். எனவே இக்குழுவின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு இல்லாதிருக்கும் எனில் இக்குழு தனது குறிக்கோள்களை எய்தக்கூடியதாக இருக்கும் எனலாம்,

சட்டங்கள் இயற்றப்படுவதனால் மட்டும் சமூக பொருளாதாரக் குறைபாடுகள் களையப்படவோ, அநீதிகள் நீக்கப்படவோ ஏதுவாகமாட்டாது. அவை செயற்படுத்தப்படவும் வேண்டும். அப்போதுதான் அச்சட்டங்கள் என்னென்ன நோக்கங்கட்காக ஆக்கப்பட்டனவோ அவை எய்தப்படக்கூடியதாக இருக்கும்.

**உசாத்துணை:**


1. The Fair Trading Commission and Anti - competitive Practices H. H. D. Silva (paper submitted in a Seminar on Fair Trading)
2. Mergers - Time to turn the tide - Denis O'Brien- Lloyds Bank Review - Oct. 1978
3. Economic Planning and Democracy - Firmin Oule.
4. Economics - an Introductory Analysis - Paul A. Samulson.
5. The Economics of Honest Trade Practices - Robert H. Nelson - The Journal of Industrial Economics - June 1976.
6. Fair Trading Commission Act No. I of 1987
7. Hansards of National State Assembly
8. Control of Monopolies & Mergers - F. C. D. Wijesinghe - Ceylon Daily News 24-04-1987
9. Management Accountancy J. Batty

23.9. [illegible] B261
SITHY VINAYACAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# ★ வணிக மஞ்சரிக்கு ★

## எமது நல்வாழ்த்துக்கள்

★

எமது சேவைகளிற் சில:

- நிதி முதலீடு தொடர்பான ஆலோசனை
- நிதி ஆய்கூற்று அறிக்கைகள் தயாரித்தல்
- முகாமைத்துவ சேவைகள்
- கம்பனி உருவாக்கத்துக்குத் தேவைப்படும் சட்ட நுணுக்க வேலைகள்

★

# Business Promoters (pvt) Ltd.

198, கஸ்தூரியார் வீதி,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.


Mahathma Printing Works, Erlalai.